விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 28 ஞாயிற்றுக்கிழமை (10.02.2002) தொலைபேசி 3378 ஒலி 53

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
"RENNY"

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## கண்டி - மடவளை படுகொலைச் சம்பவம்

# முன்னாள் அமைச்சர் அனுருத்த 4ம் மாடியில் விசாரிக்கப்பட்டார்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் அன்று கண்டி மடவளைப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த நேற்றுக்காலை கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் உள்ள 4ம் மாடியில் வைத்து பல மணிநேரம் தீவிர புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்

கொழும்பு குற்றப் புலனாயய்வு பொலிஸாரினால் நேற்றுக்காலை 10மணிமுதல் பிற்பகல் 4.30மணிவரை சுமார் ஆறரை மணிநேரம் இவ்விசாரணை இடம்பெற்றது மடவளைப்பகுதி படுகொலைச்சம்வம் தொடர்பாக விசாரணைக்கு வருமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் இவரை அழைத்திருந்தனர்.

மடவளை கொலைச்சம்பவம் தொடர்பாகவும் கொலைகளோடு சம்மந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும். அவரது இரு மகன்களான லொகான், சாணக்க ஆகிய இருவரின் இருப்பிடங்கள் தொடர்பாகவும் விசாரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மடவளை சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து. மடவளைமுஸ்லிம் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர். (வ)

## வடக்கு- கிழக்கு மாகாணத்தில்

# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்படும்!

## கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்தது

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறமாட்டாதெனவும் அத்தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாகவும் லண்டனில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி

## வீட்டை துப்பரவு செய்த பெண்மீது சிப்பாய் சேட்டை
### சாவகச்சேரியில் சம்பவம்

(தென்மராட்சி)

வீட்டை துப்பரவு செய்து கொண்டிருந்த 56வயதான ஆசிரியையை இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த எடுத்த

அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட சாவகச்சேரி கோயில் குடியிருப்பு பகுதியிலேயே இப்பாலியல் வல்லுறவு முயற்சி இடம் பெற்றுள்ளது.

**மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறமாட்டாதெனவும் அத்தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாகவும் லண்டனில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு இலங்கை அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட போதும் 1990ம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த காலஞ் சென்ற ஆர்.பிரேமதாஸா 24ம் இலக்க விசேட சட்டம் ஒன்றை கொண்டு வந்து அப்போது நடை பெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தார்.

அச்சட்ட மூலத்தை பயன் படுத்தி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைக்கப் போவதாக விஞ்ஞான கைத் தொழில், தொழில்நுட்பத்துறை அமைச்சர் மெலிந்த மொறகொட மட்டக்களப்பு மாவட்ட எம்.பி ஜோசப் பரராஜசிங்கத்திடம் உறுதிபட தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறை துறைமுகத்தில்

## பொருட்கள் இறக்கும் பணி இரவு பகலாக நடக்கும்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் தரித்துநிற்கும் கப்பல்களில் இருந்து மிக விரைவாக பொருட்களை இறக்குவதற்காக இறங்குதுறைப் பணிகளை இரவு பகல் என 24மணி நேரமாக மேற்கொள்வதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

மீனவர்களின் மறியல் போராட்டத்துக்கு இறங்குதுறை ஊழியர்கள் ஆதரவு வழங்கி மறியலில் ஈடுபட்டதால் கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் பணி கடந்த சில நாட்களாக தடைப்பட்டிருந்தது.

இந் நிலையில் தற்பொழுது

(10ம் பக்கம் பார்க்க)

### ஏ9 கண்டி – யாழ் வீதியை

## அமைச்சர் மொறகொட நேரில் பார்வையிட்டார்

(வவுனியா)

இம்மாதம் 15ம் திகதி திறக்கப்பட இருக்கும் ஏ.9யாழ்ப்பணம் கண்டி வீதியை கைத் தொழில் விஞ்ஞான துறை அமைச்சார் மெலிந்த மொறகொட நேற்று வவுனியா சென்று ஓமந்தைப் பகுதிவரை பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் கண்டிவீதியில் ஓமந்தை பகுதியே இராணுவத்தினரின் கடைசி காவலரண் இருக்குமென தெரிவிக்கப்படும் அதே

( 10ம் பக்கம் பார்க்க)

## அமெ.கடற்படை தளபதி கொழும்பில்

(கொழும்பு)

அமெரிக்கக் கடற்படை தளபதிகளில் ஒருவரான வைஸ் அட்மிரல் ஜேம்ஸ் நெட்ஸ் ஜெர் தற்போது கொழும்பில் தங்கியுள்ளார்.

ஆசியப்பிராந்திய நாடுகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள அமெரிக்க கடற்படையின் ஏழாவது பிரிவின் தளபதியான அவர் இலங்கையின் கடற்படை அதிகாரிகளையும், அரசஅதிகாரிகளையும் சந்தித்து பேசவுள்ளார். (வ)

(தென்மராட்சி)

வீட்டை துப்பரவு செய்து கொண்டிருந்த 56வயதான ஆசிரியையை இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த எடுத்த முயற்சி அயலவர்களினால் முறியடிக்கப்பட்டது.

அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட சாவகச்சேரி கோயில் குடியிருப்பு பகுதியிலேயே இப்பாலியல் வல்லுறவு முயற்சி இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப ஆசிரியை தனது

(10ம் பக்கம் பார்க்க)

## பயண அனுமதி முறை சில தினங்களில் ரத்து

### அமைச்சர் மகேஸ்வரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்வதற்கு இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் பயண அனுமதியை பெறத்தேவையில்லை என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து குடாநாட்டிலுள்ள படை அதிகாரிகளுக்கு தான் விளக்கியுள்ளதாகவும் பயணப் பாதுகாப்பு அனுமதி நீக்கம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்னும் சில தினங்களில் வெளிவரும் என்றும் அமைச்சர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (இ43)

## தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முயற்சி

(கொழும்பு)

மனிதாபிமான அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளால் விடுவிக்கப்பட்ட 10யுத்தக் கைதிகளுக்குப் பதிலாக 10தமிழ் அரசியற் கைதிகளை விடுவிப்பதற்கு காணாமல் போன படைவீரர்களின் பெற்றோர்கள் சங்கத்தலைவர் ஈ.பி.நாணயக்கார நடவடிக்கை எடுத்துள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணை அனுமதிக்கப்பட்டும் பணம் கட்டமுடியாது தென்னிலங்கை சிறையில் வாடும் 10தமிழ் அரசியல் கைதிகளுக்கு பிணைப்பணத்தைச் செலுத்தி அவர்களை விடுவித்து புலிகளிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை வழக்குத் தாக்கல் செய்யக் கூடிய அளவில் குற்றம் சாட்டப்பட முடியாதவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று ஈ.பி.நாணயக்கார கேட்டுள்ளார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவன உதவியுடன் அன்னையருக்கான இல்லங்கள் திறப்பு விழாவும், கையளிக்கும் வைபவமும் - சிறப்பிதழ் 10.02.2002

## நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி.

இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனம் துணைவனை இழந்த அன்னையர்களுக்கு இல்லம் அமைத்துக் கொடுப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆலயப் பணியோடு அருமையான ஜீவசேவை செய்து வரும் சிவயோகம் நிறுவனத்தினர் பாராட்டுக்குரியவர்கள். சென்ற ஆண்டு இவர்களின் உதவியினால் யாழ் போதானா வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைக் கூடம் அமைக்கப்பட்டது. அவ் விழாவில் யாம் கலந்து கொண்டு அவர்களின் சேவைகளைப் பற்றி அறிந்து கொண்டோம். சைவசமயம் தொண்டுப் பணிக்கு முதன்மை கொடுத்து வந்துள்ளது. அவ்வகையில் சைவசமய நிறுவனங்களுக்கு சிவயோகம் முன்உதாரணமாக செயற்பட்டு வருவது போற்றுதலுக்குரியதாகும். செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று இத்தகைய அறப்பணிகளை எம் நாட்டில் உருவாக்குவது எமக்குப் பெருமை தருகிறது. இவ்வில்லங்களைப் பெறுகின்ற குடும்பங்களுக்கும் சிவயோகம் அறக்கட்டளையினருக்கும் எமது நல்லாசிகளைத் தெரிவித்து இறையருளை வேண்டி நிறைவு செய்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லூர்,
யாழ்ப்பாணம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞானசம்பந்த*
பரமாச்சாரிய சுவாமிகள்

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி.

வரலாற்றுச் சிறப்புமிக்க கந்தரோடைக் கிராமத்தில் ஐந்து சகோதரிகளுக்கு வாழ்விடம் அமைத்துக் கொடுத்த இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினரை அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன். இப்பணி மனிதாபிமானப் பணி. ஆன்மீகப் பணிகளில் ஈடுபடும் அனைவருக்கும் முன் உதாரணப் பணியாக இப்பணி அமைந்துள்ளது. கணவனை இழந்து குழந்தைகளோடு நிர்க்கதியாக வாடும் எம் சகோதரிகளுக்கு ஆறுதல் அளிப்பதற்கு முன் வந்த சிவயோகம் அறம் காவலர்கள் ஈழத்தவர்கள் அனைவரினதும் நன்றிக்குரியவர்கள். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு வெறும் பற்றையாக இருந்த நிலம் இன்று மாதிரிக் கிராமமாக மாறியுள்ளது. இத்திருப்பணிக்கு அடிக்கல் நாட்டுகின்ற பேறு எனக்குக் கிடைத்ததையிட்டு மனம் பூரிப்படைகிறேன். எமது கல்லூரி ஆசிரியரும், எனது நண்பருமாகிய திரு.ஆறு.திருமுருகன் அவர்கள் எமது கல்லூரிச் சூழலில் இப்பணியை நிறைவேற்றியமை எமது கல்லூரிச் சமூகத்திற்கு பெருமை தருகிறது. அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமய, சமூகப் பணிகளை இன்று இலண்டன் சிவயோகம் போன்ற நிறுவனங்கள் பின்பற்றி வருவது. மெச்சத்தக்க விடயமாகும். இவ்வில்லங்களில் வசிக்கப்போகும் குடும்பங்களை மனதார வாழ்த்துவதோடு சிவயோக நிறுவனப் பணிகள் மேன்மேலும் வளர்ச்சி பெற ஸ்கந்தனை வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

*க. சிவாஜி,*
அதிபர்.

## "அன்னையர் இல்லங்கள்" ஒரு கண்ணோட்டம்



அன்னையர் குடியிருப்பில் அமைக்கப்பட்ட வீட்டின் தோற்றம்

## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துரை.

இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிதியத்தினால் கந்தரோடைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஐந்து வீடுகளும் அதற்கான வசதி வாய்ப்புகளும் மிகவும் வரவேற்கத்தக்கன. ஒழுங்கையும் பாரபட்சமற்ற நீதியையும் கடைப்பிடித்து இவ்வீடுகள் ஐந்து குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதுவரை எவரும் நினைத்துப் பாராத ஒரு தர்மகைங்கரியத்தை இலண்டன் சிவயோகம் நிறுவனம் நிறைவேற்றியுள்ளது. நிறுவனத்தின் அன்புக் கட்டளையை மனமுவந்து ஏற்று இப்பணியைச் சிறப்பாக நிறைவேற்றிய செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன் அவர்களுக்கு எமது மண் என்றும் நன்றி கூறிக் கொண்டேயிருக்கும். அத்துடன் இலண்டன் சிவயோக நிறுவனமும் அதன் தலைவர் உயர்திரு சீவரத்தினம் அவர்களும் எமது பாராட்டுதலுக்கும் வாழ்த்துக்கும் உரியவர்களாகின்றார்கள். மேலும் மேலும் சிவயோக நிறுவனம் உலகெங்கும் வாழும் தமிழ்மக்களின் துயர் துடைக்க அரும்பணியாற்ற வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

*கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி, (ச.நீ),*
*தலைவர்,*
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். தெல்லிப்பழை

## வலுவூட்டப்படும் அன்னையர்

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஈருடல் ஓருயிராக ஒருவரை ஒருவர் அன்பு செய்யும் முக்கிய நிகழ்வுத் தொடரில் ஆரம்பம் திருமண வாழ்வின் இலக்குகள் குறித்த பல்வேறு எதிர்பார்ப்புக்களோடு கருத்தொருமித்த காதலராக அவர்கள் வாழ்ந்து வரும் வேளையில் திடீரென்று வண்டியில் ஒருபக்கச் சில்லு முறிந்து விழுந்து விட்டால்....?

கணவனை இழந்து விட்ட குடும்பங்களின் வாழ்வுப் பயணத்தை மீண்டும் செம்மையாக்கி கொள்வதற்கு மிகுந்த அறிவும், ஆற்றலும், திடமான மனப்பாங்கும் தேவை. எமது சமூகம் பெண்களுக்கு எந்த அழவுக்கு இவற்றை வழங்கியுள்ளது என்பது கேள்வி. கணவனை இழந்துவிட்டால் எப்படி கைம்மை கோலம் ஏற்பது, அப்படி எல்லா விடயங்களிலும் இருந்து ஒதுங்கி வாழ்வது என்றுதான் இந்துப் பெண்கள் பயிற்றப்பட்டிருக்கிறார்கள். பெண் என்பவள் தாழ்ந்து போகும் இயல்புள்ள, தங்கி வாழுகிற உடலிலும் உள்ளதிலும் மென்மையான ஒரு ஜீவன் என்றவாறு விதைக்கப்பட்ட எண்ணக்கருக்கள் கணவன் இறந்த பிறகாவது அவள் வேறு ஒரு ஆளுமை ஏற்பதை தடை

## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனை உரை.

1999ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற அனைத்துலக சைவமகாநாட்டில் கலந்து கொள்வதற்காக் இலண்டன் சென்ற சிறியேனை இலண்டனில் வாழும் பல சைவ நிறுவனங்கள் அழைத்து கௌரவித்தன. இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் ஆற்றி வரும் ஆன்மீகப் பணிகளை எடுத்துரைத்து அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் கரம்பன் திருவூரைச் சேர்ந்த திரு சிவானந்தசோதி அவர்கள். இலண்டன் சிவயோகம் நிறுவனத்தின் தலைவராக விளங்குகின்ற மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நாகேந்திரம் சீவரத்தினம் அவர்கள் எமக்குத் தொடர்பு ஏற்பட்ட நாள் முதல் பல நல்ல பணிகளை எம் மண்ணில் நிறைவேற்றுவதற்கு பேருதவிபுரிந்து வருகின்றார்.இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலயம் இன்று மிகவும் பிரசித்திபெற்று விளங்குகிறது. சிவயோகம் அறக்கட்டளையினரின் நிர்வாகத்தின் கீழுள்ள இத்திருக் கோவிலின் வருவாயில் ஒரு பகுதி தொடர்ந்து தர்ம காரியங்களுக்குப் பயன்படுத்தி வருவது பலரும் அறிந்ததே. அவ்வகையில், சென்ற ஆண்டு யாழ்போதனா வைத்திய சாலையில் பன்னிரண்டரை இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளைக் கொண்ட கண்சத்திர சிக்சைக் கூடத்தினை இவர்களின் உதவியினால் நாம் முன்னின்று கட்டி முடிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. கடந்த சித்திரை மாதம் இலண்டன் முத்துமாரி அம்மன் கோயிலில் தொடர் விரிவுரையாற்றுகின்ற பேறு எனக்கு கிடைத்தது. எமது நாட்டில் போரின் அனர்த்தங்களினால் குடும்பத் தலைவர்களை இழந்து பெண்கள் படும் அவலத்தை எடுத்துரைத்தேன். சிவயோகம் நிர்வாக சபையினர் எனதுரைக்கு மதிப்பளித்து இப்பெரும் பணியை இன்று நிறைவேற்றித் தந்துள்ளனர். கந்தரோடைக் கிராமத்தில் ஒருலட்சத்து எழுபதினாயிரம் ரூபா செலவில் காணி கொள்வனவு செய்யப்பட்டு ஒவ்வொரு வீடும் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வரை செலவு செய்யப்பட்டு அழகாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சிவயோகம் அன்னையர் குடியிருப்பு என்ற வீடமைப்புத்திட்டத்திற்கு அருகில் சிவயோகம் சிறுவர்பூங்கா, சிவயோகம் சிறுவர் பாடசாலை என்பனவும் உருவாக்கப்பட்டு வருகிறது. பழந் தமிழ் வேந்தர்கள் அரசமைத்து ஆட்சி செய்த புனித பூமி கந்தரோடை. இத்திருவூரில் சைவசமயத்தவர்களின் பெயரில் கணவனை இழந்த அன்னையருக்கு குடியிருப்பு அமைக்கப்பட்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும். எமது சமயத்தவரிடையே நவீன சீர்திருத்தச் சிந்தனைகள் இன்று முன் வைக்கப்பட வேண்டியது அவசியமாகும். எம்மை ஆற்றுப்படுத்துகின்ற அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்கள் எமது சமயத்தவரின் பெயரால் பல புதிய பணிகளை, சீர்திருத்தங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். இந்நிலையிலேயே என் அறிவுக்கு எட்டிய சில கைங்கரியங்களை இறைவனுடைய திருவருளினாலும், பெரியோர்களினுடைய ஆசியினாலும், அன்பர்களின் பேருதவிகளினாலும் நிறைவேற்றக் கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவ்வகையில் சிவயோகம் அன்னையர் குடியிருப்புப் பணிக்கு உதவிய இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினருக்கும், கட்டட நிர்மாணப் பணிகளை சிறப்பாக நிறைவேற்றித் தந்த திரு. ஆறுமுகநாதன் ஜனார்த்தனன் நிறுவனத்தினருக்கும், பொறியியல் பணியை நிறைவேற்றிய திரு. சிவலோகநாதன் அவர்கட்கும், சிறுவர்பூங்காவிற்கான வடிவமைப்பை உருவாக்கிய சிற்ப நிர்மாணக் கலைஞர் திரு. வே.பாலேந்திரன் அவர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். அன்னையர் இல்லங்களை வழங்குவதற்காக நடாத்தப்பெற்ற நேர்முகப் பரீட்சையில் பரீட்சையை சிறப்பாக நடாத்தியுதவிய பெரியவர்களுக்கும் கந்தரோடைக் கிராமத்தில் இப்பணிக்குப் பேருக்கம் வழங்கிய கிராம மக்களுக்கும் எனது மனம்

# "அன்னையர் இல்லங்கள்" ஒரு கண்ணோட்டம்.

முதல் தடவையாக ஒரு இந்து நிறுவனம், சமூகத்திலே கண்ணீரைச் சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களை இனங்கண்டு, அவர்களுள்ளும் மிகவும் பொருத்தமானவர்களுக்கு இலவசமாக இல்லங்களை வழங்க முன்வந்திருப்பது அதீத சிந்தனைக்கும், ஆரோக்கியமான எடுத்துக்காட்டலுக்கும் உரியதாகும். அறஞ் செய்ய விரும்பு என்று ஔவை மொழிந்ததன் தாற்பரியத்தினை ஆழமாகப் புரிந்து கொள்ளும் ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு நிறுவனமும் அறத்தினை இது போன்று விரும்ப வேண்டும். அந்த் விருப்பம் தான், இன்னும் பல அன்னையர் இல்லங்களைக் கணவரை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு, அமைத்திட வழிசமைக்கும். "அன்யைருக்கு இல்லங்கள்"என்ற இலக்கினை அடைய விரும்பிய திரு.ஆறு. திருமுருகன் இலண்டனில் சொற்பொழிவு ஆற்றிய போது, இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனத்தினர் தூய மனதோடு இணைந்து செயற்பட விரும்பியதன் பேறே இந்த அன்னையர் இல்லங்களாகும். மூன்று மாதங்களுக்கு முன்னதாக அத்திவாரமிடப்பட்ட நிலையில் துரிதகதியில் விரைந்து செயற்பட்டவர் திருமுருகன் அவர்கள். பொருத்தமான அன்னையரைத் தெரிவுசெய்வதற்காகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, அவகாசம் அளித்த நிலையில், முப்பத்து மூன்று விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சையை 02-02-2002ல் நடத்திய போதுதான், கண்ணீர் ஊற்றுக்கள் கீற்றாக எழுந்தன. தேர்வாளர் சபையில் கடமையாற்றிய, வைத்திய கலாநிதி பவானி சந்திரகுமார், உதவிக் கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலைவாணி இரமநாதன், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் இரதி தியாகராஜா, ஆங்கிலப்போதனாசிரியர் கருணாதேவி சிவாஜி யாவரும் அன்றைய தினம் கண்ணீரால் நனைந்தனர். இன்றைய தினம் "அன்னையர் இல்லங்கள்" இந்த மண்ணிற்கு ஒரு புதிய செய்தியைச் சொல்கிறது.!! ...........

*கே. எஸ். சிவஞானராஜா*

பெண்கள் பயிற்றப்பட்டிருக்கிறார்கள். பெண் என்பவள் தாழ்ந்து போகும் இயல்புள்ள, தங்கி வாழுகிற உடலிலும் உள்ளதிலும் மென்மையான ஒரு ஜீவன் என்றவாறு விதைக்கப்பட்ட எண்ணக்கருக்கள் கணவன் இறந்த பிறகாவது அவள் வேறு ஒரு ஆளுமை ஏற்பதை தடை செய்கின்றன. மேலும் மஞ்சள்குங்கும் இழத்தல், தாலி இழத்தல் ஆகிய விடயங்கள் அவளது உள்ளத்தை மிக மோசமாக உருக்குலைக்கும் விடயங்கள். எமது இந்தியத் திரைப்படங்களில் கணவன் இறந்ததும் ஒரு வலிய கரம் வந்து அவளின் பொட்டை அழிக்கும், வளையல்களை உடைக்கும் அதன் பின்வரும் காட்சிகளில் அவள் வெள்ளைச்சேலை அணிந்து வருவாள். இவையெல்லாம் யதார்த்தத்தில் விதவையாகி விட்ட பெண்ணின் அகக் காட்சியில் வர அவள்மனம் காய்ந்துபோகிறது. மலர் காய்ந்து போனால் சரமாகலாம் மனம் காய்ந்து போனால் என்ன செய்யலாம்.

வமான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். அன்னையர் இல்லங்களை வழங்குவதற்காக நடாத்தப்பெற்ற நேர்முகப் பரீட்சையில் பரீட்சையை சிறப்பாக நடாத்தியுதவிய பெரியவர்களுக்கும் கந்தரோடைக் கிராமத்தில் இப்பணிக்குப் பேரூக்கம் வழங்கிய கிராம மக்களுக்கும் எனது மனம் நிறைந் நன்றிகள் உரித்தாகட்டும். இத்தகைய அறப்பணிகளில் இளைய தலைமுறையினர் ஈடுபட வேண்டும் என்பதனை வலியுறுத்துவதோடு யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற இந்துசமய நிறுவனங்களும், இந்துக் கோயில்களின் அறங்காவலர்களும் இது போன்ற சமுதாயப்பணிகளில் ஈடுபடுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். சிவயோகம் அன்னையர் குடியிருப்புப்பணி நிறைவேறுவதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறி எம்மண்ணில் அமைதியும் ஆனந்தமுமான வாழ்வும் கிடைக்கப் பிரார்த்தித்து எனது பிரார்த்தனை உரையை நிறைவு செய்கின்றேன்.

*ஆறு. திருமுருகன்*

## கோகிலா மகேந்திரன்

உலகம் முழுவதிலுமே ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்கள் ஒன்றரை மடங்கு அதிகமாக உள ஆரோக்கியம் குன்றி இருக்கிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆழ்ந்த மனச்சோர்வு, பீதிநோய், கண்டிதக்கோளாறு, மெய்ப்பாட்டு நோய்கள் போன்ற உளத்தாக்கங்களுக்குள் பெண்கள் அதிகம் உட்படுகின்றார்கள். திருமணமாகி குடும்ப வாழ்வு வாழும் பெண்களை விட கணவனை இழந்த பெண்கள் அதிகம் உளப்பாதிப்புக்கு உள்ளாவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எமது சமூகத்தில் விதவைப் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை அவளை வன்முறைக்கு உட்படுத்துவது சுலபம் என்ற கருத்து சமூகத்தில் உள்ளது. இவையெல்லாம் உள்ளிருந்து அவளை அரிக்கும் பூச்சிகள். வயதில் குறைந்த பிள்ளைகள் பலர் வீட்டில் இருக்கும் போது அவளது நெருக்கீடு இன்னும் அதிகமாகின்றது. இவர்கள் தங்கி வாழும் இடங்கள் பாதுகாப்பற்றவையாக இருக்கும் போது தவறான வழிகளில் ஈடுபடவும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவன உதவியுடன் கந்தரோடையில் அமைக்கப்பட்டுள்ள ஐந்து வீடுகளை கையளிப்பதற்கு பொருத்தமான - கணவனை இழந்த அன்னையரை தெரிவு செய்யும் நோக்கில் பலரை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சந்திக்க நேர்ந்தது.

எமது பிரதேசத்தின் கொடிய போர்ச் சூழலில் குடும்பப்பொருளாதாரத்தை சிறிதளவாவது ஈட்டித்தந்த ஆண்மகனை இழந்து பெரும்பொருளாதார பிரச்சினைக்குள் சிக்கித்தவிக்கும் குடும்பங்களாகவே அனைத்தும் இருந்தன. பல பெண்கள் தமது ஆழ்ந்த உணர்வுகளை இன்னும் சமப்படுத்தி கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டனர். சிலர் இன்னும் கணவனின் இழப்புத்துயரில் இருந்து சிறிதும் மீளவில்லை. சிலரிடம் மெய்ப்பாட்டு அறிகுறிகள் பலமாக் காணப்பட்டன. பலர் எந்த வித தீர்மானமும் எடுக்க முடியாத நிலையில் இருந்தனர். எவருக்கும் பிரச்சினை தீர்த்தல் படிமுறைகள் தெரிந்திருக்கவில்லை. பிரச்சினைகளை இனங்காணவே முடியாத நிலையிலேயே பலர் இருந்தனர்.

பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யும் எமது முயற்சியில் அவர்களின் வயது, பிள்ளைகளின் எண்ணிக்கை பிள்ளைகளின் வயது, வருமானம் அவர்கள் நேர்முகக்தை எதிர்கொண்ட முறை அவர்களில் தங்கியிருப்போர் நிலை அவர்களின் உடல்நிலை, உளநோய்கள் தமது அடிப்படை உணவுத்தேவையை பூர்த்திசெய்யும் ஆற்றல் ஆகிய விடயங்களைக் கருத்தில் எடுத்து நோக்கினோம்.

(6 பக்கம் பார்க்க)



# இயேசுவின் மரணம் மனித கணிப்பில் கொலை

## உயிர்ப்பு இறையுடன் ஒப்புரவாகும் நற்செய்தி

### பரமபிதாகாட்டியபாதை

காரணமற்ற திடீர்க் கொலைகளும், பிறரைக் கொலை செய்யும் நோக்குடன் தாமே மரணத்தை அணைத்துக் கொள்வதும், அவலச் சாவுகளும் எமக்கு சாதாரண நிகழ்வுகளாகி விட்டன. நாளாந்தம் நீண்டு கொண்டு போகும் இம் மரணப் பட்டியலில்இடம்பெறும் ஆண்களும், பெண்களும் சிசுக்களும் வெறும் எண்ணிக்கைகள் மட்டுமல்ல, மாறாக இத்துன்பத்தின் காலத்தினூடாக இறைமகன் இயேசு எம்மோடு பேசும் காரணிகளும் கூட.

இறைவனுக்காகவும் மற்ற மனிதர்களுக்காகவும் தியாகத்தோடு இறப்பது ஓர் அர்த்தமற்ற செயலல்ல என்பதை சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உயிர்ப்பு சுட்டிக் காட்டுகின்றது. மனிதத்தின் இறுதி அர்த்தத்திற்கும் நீதிக்குமாக 'குரல் கொடுக்கின்ற போது வரலாற்றில் தொலைந்து போன எத்தனையோ பேருடைய அநாமநேய மறைவுகள் இயேசுவின் உயிர்ப்பில் ஒளி பெறுகின்றன. எந்தக் கொலையாளியும் தான் கொலை செய்தவனை வெற்றி கொள்ள முடியாது என்று இதுசான்று பகர்கின்றது.

### கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்

அன்று யூத சமுதாயத்தில் கிறிஸ்து ஒரு சாதாரண னிதனாக வாழ்ந்தார். அந்த சமூகம் அவரை மனிதனாக பார்த்தது. அன்றைய சமூக, பொருளாதார, அரசியல் தாக்கங்களுக்கு அவரும் இலக்காக்கப்பட்டார். ஆனால் அவர் தனது சுய சிந்தனையில் தனித்துவமாக வாழ முயன்றவர். அர்த்தமற்ற அமைப்புக்களுக்கு சவாலாக தனது வாழ்வை அமைத்துக் கொண்டார். இயேசு தனது வார்த்தைக்கு அமைய வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொண்டார். அவ்வாழ்க்கையின் இயல்பைப் புரிந்து கொள்ளாமல் பிறர் விமர்சிக்கும் போது தன்னை அவர் அலட்டிக் கொள்ளவில்லை. அவர்களைப் பார்த்து இயேசு கூறிய வார்த்தை 'கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்' என்பதாகும் வறண்ட கொடிபோல வாழ்ந்தோருடன், பேசினார், உவமை உருவில் உரையாடினார் இயேசுவை புரிந்தோர், ஏற்றோர் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்தது. அவர்கள் வாழ்வில் வைராக்கியம் தளர்ந்தது, விழிப்புணர்வு பிறந்தது. இவ்வாறு இயேசு தனது வாழ்வின் ஊடாகவே யதார்த்தமாக உயிர்ப்புக்கு அர்த்தத்தைக் கொடுத்து உயிர்ப்பு வாழ்க்கையின் ஓர் பகுதி என உணர்த்தினார். ஆனால் அன்றைய சமுதாயத்தில் கிறிஸ்துவிற்குமரணம்நேர்ந்தது.வரலாற்று ரீதியான ஒரு கொலை அம்மரணம்.மனித கணிப்பின் படி கிறிஸ்துவிற்கு ஏற்பட்ட ஓர் தோல்வியே. ஆனால் நற்செய்தியின் படி இயேசுவின் மரணத்தின் மூன்றாம் நாளில் கிறிஸ்து உயிர் பெறுகின்றார். (காண்க மத்28:1-4)இங்கு இயேசு மரணத்தைவெல்கின்றார்.

### புதுவாழ்வு

கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் அவர் எதிர்பார்த்தவையே!கிறிஸ்து தம் வாழ்வில் பல தடவைகள் மரணம் பற்றிப் பேசினார். அவர் பேசியமரணத்தின் பின்னணியில்உயிர்ப்பின்வாடைவீசியது கிறிஸ்து பேசிய மரணம்நாங்கள் கருதும் மரணம் அல்ல கிறிஸ்து உலகு பற்றிக் கொண்ட நோக்கும் மனிதர்கள் பால் கொண்ட ஈடுபாடும் அவரது மதிப்பீடுகளும் வித்தியாசமானவை சுயநலமும்,போட்டியும், பொறாமையும் அடக்கு முறைகளும் கொண்ட வாழ்க்கையில் அவரது மனிதாபிமானமான இறையூட்டமுள்ள வாழ்வுக்கு ஓர் விடிவு உண்டு.எனஇயேசு நம்பினார்.அதன் விலையாக தனது மரணத்தைக் கருதினார்.ஆனால் அவர் மரணத்தை வாழ்க்கையின் முடிவாக எதிர்பார்க்கவில்லை. அதனால் கிறிஸ்துவின் வாழ்க்கை மரணத்தோடு முடிவடையவில்லை எங்கெல்லாம் மக்கள் அவரின் வாழும் பிரசன்னத்தை உணர்ந்து கொண்டார்களோ அங்கெல்லாம் புதுவாழ்வு மலர்ந்தது அன்று அச்சத்தால் வாடிய சீடர்கள் சாட்சியம் பகர்ந்த போது அங்கு விசுவாசம் புத்தொளிவிட்டது.

இக் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அடித்தளமாகவுள்ள இயேசுவின்பாடுகள்-மரணம்-உயிர்ப்பு இவை முடிந்து விட்ட,முற்றுப்பெற்றுவிட்ட, இறந்தகால, வரலாற்றில் சாய்ந்துபோன நிகழ்ச்சிகள் அல்ல. இவை இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் இணைக்கும் சாதனமாகும். நாமும் இயேசுவில் ஒன்றிணைய வேண்டுமென்றால், உயிர் பெற வேண்டுமென்றால், உயர்வடைய வேண்டுமென்றால் இவற்றை நாம் நம்பிக்கை நிறைந்த விசுவாசத்தோடு ஏற்று, விசுவாச நிறை நம்பிக்கையினால் நம் இதயத்திலே இவற்றிற்கு உயிரூட்டத்தைக்கொடுக்க வேண்டும். அதற்கு நாம் ஒவ்வொருவரும் மாறவேண்டும்.

### இறைவனின் ஒப்புரவு

தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய மடலிலே உயிர்ப்பு நம்மில் நிகழ்வதற்கு எமது பழைய பாவ இயல்புகள் களையப்பட வேண்டும் எனவும், புதிய இயல்புகளை ஏற்றுக் கொள்ளும் ஆர்வமும் உறுதியும் நமக்கு ஏற்பட

6ஆம் பக்கம் பார்க்க

அருட்சகோதரன் எஸ்.ஏ.றொஷான்
கொழும்புத்துறை

# உங்கள் பிறப்பு நட்சத்திரத்திற்குகந்ததான

# சுபவேளைகளைத் தெரிந்து செயற்படுங்கள்

### சோதிட பலன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

மூலம் நட்சத்திரம்

பிறப்பு நட்சத்திரம் மூலமாக இருந்தால் எப்போதும் உங்களுக்கு நன்மை செய்யும் நட்சத்திரம் திருவோணம். இதன் பலன் தாராபலன் 4 க்கு சுகவிருத்தி. அதிபதி குரு. வாகனம் வெள்ளை யானை.அதிபதிபலன் தைரியம். வாகனப்பலன் லக்ஷ்மி கடாட்சம்.சந்திரன் பலன்- அமாவாசை கழிந்த இரண்டாது நாள்.உங்களுக்கு எல்லாவிதமான சுபகாரியங்களும் செய்ய ஏற்ற நாள்.புதிய தொழில் ஆரம்பம் செய்ய, பங்குதாரர்களைச் சேர்க்க, கட்டடம் அடிக்கல் நாட்ட, வீட்டிற்கு வாயில் வைக்கவும் சிறப்பான நாள் கிழமையில் திங்கட்கிழமை வரும் நாள் திருவோணம் நட்சத்திரமாக இருந்தால் அமிர்தயோகம் உதயமாகும்.ஆனந்தாதியோகத்தில் சித்த யோகம். இதன் பலன் சகல காரியங்களும் சித்தியாகும். புதன்கிழமையில் திருவோணநட்சத்திரம் வரும் நாள் சித்தயோகம் உதயமாகும்.ஆனந்தாதி யோகத்தில் இது க்ஷத்திரியயோகம் இதனால் சகல சம்பத்தும் உண்டாகும்.

இந்த நாளில் நீங்கள் செய்யும் முயற்சிகளெல்லாம் வெற்றியாகி சகல சம்பத்தையும் அடையப் பெறுவீர். கலைத் தொழில் ஆரம்பிக்க, கட்டடக்கல் நாட்ட, வாகனத் தொழில் ஆரம்பம் செய்யச் சிறப்பான காலமிது. கௌரி பஞ்சாங்க காலம் காலைமணி 9 முதல் 10.30 மணிக்குள் குரு ஓரையில்எல்லாவிதமான பெரிய முயற்சிகளிலும் ஈடுபடலாம்.இதன் மூலம் சகல காரியங்களும் சித்தியாகும். மேலும் வியாழக்கிழமையில் திருவோணம் நட்சத்திரம் வரும் நாள் சித்தயோகம் உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் மகாஜனயோகம் அல்லது துவஜயோகம்என்பதாகும்.இதன் பலன்பொருள் சேர்க்கை.இந்த நாளில் தேர்தல் மனுபோட, தொழில் ஆரம்ப பூஜை போடவும்சிறப்பான நாளாகும்.இதன்மூலம் சகல பாக்கியமும் உண்டாகும். இவைகளைப் பயன்படுத்துவதன்மூலம் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு வழிவகுக்கலாம்.

மூலம் நட்சத்திரகாரர்களுக்கு-வேதை (ஆகாதநட்சத்திரம்)-ஆயிலியம். திருமணம் செய்ய, தொழில் கூட்ச் சேர்க்க உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள(ரச்சு)6 அவைகள் அச்சுவினி, ஆயிலியம், மகம்,கேட்டை,மூலம்,ரேவதி ஆகியவைகள். அதிர்ஷ்ட மலர்-தாமரைஅனுகூல தெய்வம்இந்திரன்.அதிர்ஷ்டக்கல்- வைடூரியம்.அதிர்ஷ்ட நிறம்- கரும் பச்சை அதிர்ஷ்ட எண்- 1,19.

பூராடம் நட்சத்திரம்

உங்கள் நட்சத்திரம் 20 வது நட்சத்திரம்.இது சுக்கிரனுக்கு உரியது. உங்களுக்கு எப்போதும் நன்மை செய்யும் நட்சத்திரம் ரேவதி. தாரா பலன் எட்டுக்கு மைத்திரம். அதிபதி சுக்கிரன். வாகனம் கருடன்.அதிபதி பலன் இன்ப உணர்வு.வாகனப்பயன் சுப விருத்தி.வளர்பிறை காலம் எப்போதும் நன்மை செய்யும் காலம் நீங்கள் எந்தசுபமுயற்சிகளை செய்தாலும் இப்படிப்பட்ட நாட்களிற் தான்வைத்துக்கொள்ளவேண்டும்.அப்போது உங்கள் விருப்பங்கள் பூர்த்தியாகும். குறிப்பாக கல்யாணம்,காதல்சம்பந்தமான முயற்சிகளுக்கு முழு நன்மையை உண்டாக்கும். ஞாயிற்றுக்கிழமை ரேவதிநட்சத்திரம் வரும் நாள் அமிர்த யோகம் உதயநாள். ஆனத்தாதி யோகத்தில்மகரிஷிவாக்கியப்படி வர்த்தமானயோகம் உள்ள நாள்.இதன் பலன் பெரும் பொருள் விருத்தி. காலை 6.30 மணி முதல் 7.45 மணிக்குள் எந்தசுபகாரியம் செய்தாலும் நற்பலனையே செய்யும். ஆடல், பாடல்,வித்தை ஆரம்பிக்க கலைத்துறை- சினிமாப்படம் பூஜை போடவும மிக மிகச் சிறப்பான நாளாகும். காலம் வரும் வரை காத்திருந்து செய்யுங்கள்- விருப்பம் பூர்த்தியாகும். தியேட்டர் கட்ட, கடைக்கால்போடவும் சிறப்பானநாள் இது.சுக்கிரன் ஓரை சிறப்பு,பூராடம் நட்சத்திரம் உடைய உங்களுக்கு திங்கட்கிழமையில் ரேவதி நட்சத்திரம் உதயமாகும் சித்த யோகம் தான்.ஆனால் ஆனந்தாதியோகத்தில் மாதங்க யோகம் வருவதால் இந்த நாள் உங்களுக்கு ஆகாதநாள் அப்படியே ஏதாவது செய்யும் அவசியம், அவசரம் ஏற்பட்டால் காலை 6 மணி முதல் 7 க்குள் சந்திரன் ஓரையில் எதையும் செய்யலாம். இதனால் பாதிப்பு ஏதும்இல்லை.

வியாழக்கிழமையில் ரேவதி நட்சத்திரம் வரும்நாள் சித்த யோகம் உதயமாகும். மகரிஷி வாக்கியம் ஆனந்தாதி யோக விளக்கப்படி மந்திர யோகம் வரும் நாள். இது மிகமிகச் சிறப்பானநாள் என்பதால், உங்கள் எல்லா முயற்சிகளையும் வைத்துக் கொளளலாம். மந்திரயோகத்தின் பலன் இராஜ்ய பரிபாலனம், உயர் பதவிக்குப் போட்டியிடுதல், தேர்தலுக்கு மனுப் போடுதல்,எழுதுவதுபோன்ற சுபமுயற்சிகள் வைத்துக் கொள்ள வெற்றி நிச்சயம், வெள்ளிக்கிழமையில் ரேவதி நட்சத்திரம் வரும்நாள் சித்த யோகம் உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் ஸ்ரீவர்ச்ச யோகம் நாள். இதன்பலன் லட்சுமி லாபம் (தன சேர்க்கை), இந்த நாளில் நீங்கள் எல்லா சுபமுயற்சிகளிலும் ஈடுபட வெற்றி உறுதியாகும். ரேவதி நட்சத்திரம் வெளளிக்கிழமையில் வரும் நாள் பகல் மணி 1.00 முதல் 1. 40 மணிக்குள் உங்கள் முயற்சி,எதுவானாலும் வைத்துக் கொள்ள சுபநாள். தொழில் சம்பந்தமாகப்பேச, ஒப்பந்தம்செய்ய, கையெழுத்துப் போடவும் மிகவும் சிறப்பான நாளே.

புராடம்நட்சத்திரத்திற்கு வேதை (ஆகாத நட்சத்திரம்) பூசம். திருமணம் செய்ய, தொழில் கூட்டுசேர்க்க உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள் 6. (ரச்சு). அவைகள்- பரணி, பூரம், பூசம், அனுஷம், பூராடம்,உத்தரட்டாதி ஆகியவைகள். அதிர்ஷ்ட மலர் வெண்தாமரை, அனுகூல தெய்வம் லக்ஷ்மி,அதிர்ஷ்டக்கல்- வைரம். அதிர்ஷ்ட நிறம் வெண்நீலம். அதிர்ஷ்ட எண் - 2 , 20 .

உத்தராடம் நட்சத்திரம் 1 ஆம் பாதம்

உங்கள் நட்சத்திரம் உத்தராடமாக இருப்பதால் எப்போதும் சதய நட்சத்திரம் நன்மைக்குரியதாகும். தாரா பலன் 4க்கு சுபநலம். அதிபதிபலன் தைரியம். வாகனபலன் லக்ஷ்மிலாபம். சந்திரன் பலன்- உத்தராடம் நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கு இராசி தனுசு, வளர்பிறைகாலம். அதாவது அமாவாசை கழிந்த மூன்றாம் நாள்,எல்லா சுப காரியங்களும் செய்யலாம். திங்கட்கிழமையில் சதயம்நட்சத்திரம் வரும்நாள் சித்த யோகம் உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் அமிர்த யோகம் உள்ள நாள். இந்த நாள் உத்தராடம் முதல் பாதத்தில் பிறந்தவர்கள் எல்லா சுபகாரியங்களையும் செய்யச் சிறப்பான நன்மைகள் கிடைக்கும். பகல் மணி 11.00 க்குமேல் 12.00 மணிக்குள் லாப வேளையில் எல்லாவிதமான சுபகாரியங்களும் செய்ய ஏற்றநாள்.

புதன்கிழமையில் சதய நட்சத்திரம் வரும் நாள சித்த யோகம் உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் உள்ளநாள். இதன்பலன் இராஜ சன்மானம் உண்டாக்கும். கௌரி பஞ்சாங்ககாலம் காலை மணி 6.30 முதல்7.15 மணிக்குள் உங்கள் முயற்சிகள் அனைத்தையும் வைத்துக் கொண்டால் வெற்றி உறுதியாகும். வீடுகட்ட, மனை முகூர்த்தம்மற்றும் பல சுபங்களும் செய்யலாம்.

உத்தராடம் நட்சத்திரத்திற்கு வேதை- (ஆகாத நட்சத்திரம்) புனர்பூசம். திருமணம் செய்ய,தொழில் கூட்டு சேர்க்க உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள் (ரச்சு) 6, அவைகள்- கார்த்திகை,புனர்பூசம்,உத்தரம், விசாகம் உத்தராடம், பூரட்டாதி ஆகியவைகள். அதிர்ஷ்ட மலர்- தாமரை அனுகூல தெய்வம்- சிவன்.அதிர்ஷ்டக்கல்மாணிக்கம்.அதிர்ஷ்டநிறம் - பச்சை, அதிர்ஷ்ட எண்- 3.

(தொடரும்)

டாக்டர் எம். வி. ராமன்
சோதிடவித்தகர்

### வேலை வாய்ப்பு வழங்குக!

# அலரி மாளிகை முன்பாக 1500 பட்டதாரிகள் போராட்டம்

(கொழும்பு)

வேலை வாய்ப்பு வழங்கக் கோரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வாசஸ்தலமான அலரி மாளிகை முன் கடந்த புதனன்று பட்டதாரிகள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளில் ஆர்ப்பாட்டக்காரர் அலரி மாளிகைக்கு சமீபமாகச்சென்றது இதுவே முதல் தடவையாகும்.

சுமார் ஆயிரத்து 500 பட்டதாரிகள் கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு அலரிமாளிகை நோக்கி கோஷங்களை எழுப்பியவாறு சென்று,

அலரிமாளிகை வாயிலின் முன்பாக அமர்ந்திருந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அத்துடன், பிரதமரைச் சந்தித்து தங்கள் நிலைமையை வெளிப்படுத்தும் மகஜரைக் கையளிக்க அனுமதிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, பிரதமரின் இணைப்புச் செயலாளர் கே.பி.தயாரத்ன பட்டதாரிகளிடமிருந்து மகஜரைப்பெற்றதுடன், அரச வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது அவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும் எனவும் உறுதியளித்தார். (உ)

## வடக்கு-கிழக்கில் சமுர்த்தி வங்கிகள் விரைவில் ஆரம்பம்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் சமுர்த்தி வங்கிகளை ஆரம்பிக்க சமுர்த்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக சமுர்த்தி முகாமையாளர்கள், பிரதேச செயலாளர்களுடன் சமுர்த்தி அமைச்சர் ஆர்.ஏ.டிசிறிசேன பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இப் பேச்சுவார்த்தை வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் நடைபெறவுள்ளது. (உ-3)

## அர்ப்பணிப்புடன் சேவை புரிவோர்க்கு வெளிநாட்டுபுலமைப்பரிசில்

(கொழும்பு)

தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் சேவை செய்வோர் வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் உட்பட பதவியுயர்வுகள் மற்றும் சலுகைகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இத்தகவலை வேலை வாய்ப்பு மற்றும் தொழில் துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவெளியிட்டுள்ளார். (உ)

## இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி 5 தினங்கள்

(ஈச்சமோட்டை)

யாழ்.திருமறைக் கலா மன்றம் வருடந்தோறும் நடாத்தும் இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பை சித்தரிக்கும் பிரமாண்டமான பக்திப் படைப்பாகிய' திருப்பாடுகளின் காட்சி' இவ் வருடமும் எதிர் வரும் மார்ச்மாதம்18, 19ஆம் திகதிகளிலும்21, 22 23ஆம் திகதிகளிலும் மன்ற அரங்கில்இடம்பெறவுள்ளது.

இந்தப் பக்திப் படைப்புக்கான ஒத்திகைகள் எதிர்வரும் 13ஆம்திகதி விபூதிப் புதனன்று மாலை 4.30 மணிக்கு மன்ற கலைத்தூதுமணி மண்டபத்தில்இடம்பெறவுள்ளது.

நூற்றுக் கணக்கான கலைஞர்கள் பங்குகொள்ளும்இந்த பக்திப்படைப்பில் இணைந்து நடிக்க விரும்பிய ஆண்பெண் இருபாலரும் அன்றைய தினம் மாலை 4.30மணிக்குமன்றத்திற்கு வருகைதந்து பெயர்களைப் பதிவு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-59)

### இயேசுவின்

வேண்டும் எனவும் தன்னலம், பகை, வன்மம், அழுக்காறு, இறுமாப்பு, சீற்றம், பொறாமை, கொலை, களவு, காமம் எனும் அடிப்படை பாவ வீழ்ச்சிகளில் இருந்து எழுந்து தந்தையாம் இறைவனில் ஒப்புரவாக இயேசு அழைப்பு விடுகின்றார் எனக்கூறுகின்றார். எவ்வாறு ஊதாரி மைந்தன் எழுந்து தன் தந்தையிடம் சென்று ஒப்புரவாகி கொண்டானோ அவ்வாறு நாமும் அந்த அனுபவத்தை பெற்றால் தான் உயிர்ப்பில் பங்குகொள்ள முடியும்.

இறைதந்தை ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலம் அளிக்கும் பாவ மன்னிப்பும் அதன் மூலம் கிடைக்கும் இறை அருளும், மகிழ்ச்சியும் இயேசுவின் கொடைகளாகும். தொடர்கின்ற போரும் அதன் கொடிய விளைவாகியமானிட மரணங்களும் எம்மை நிபந்தனை அற்ற அன்பில் நிலைத்து வாழ்ந்து, சமாதானத்தை எம் இல்லத்திலும், சமூகத்திலும், நாட்டிலும் பெற்று எம வாழ்வாக்க முயல்வோம்.

## மதுவாங்கிவர மறுத்த மகளுக்கு நெருப்புச் சூடு கொடிய தாய் பொலிஸில்

(புத்தளம்)

மதுபானம் வாங்கி வர மறுத்த 7 வயது மகளை நெருப்புக்கொள்ளியால் சுட்டுக் கொடுமைப்படுத்தினாள் தாய்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறன்று கற்பிட்டி ஏத்தால பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் காலை டி.எம். புஷ்பராணி (வயது 32) என்ற பெண், தனது 7 வயது மகளை மதுபானம் வாங்கி வரும்படி கூறவே சிறுமி மறுத்துள்ளார்.

இதனால் ஆத்திரமுற்ற தாய், அச்சிறுமியை மரத்துடன் கட்டிவைத்து 11 தடவைகள் நெருப்பால் சுட்டுள்ளார்.

கொடுமை தாங்கமுடியாத சிறுமி அலறுவதைக் கேட்டு அயலவர்கள் ஓடிச்சென்று பிரஸ்தாபசிறுமியைக் காப்பாற்றி வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், கொடிய தாயை பொலிஸாரிடம் காட்டியும் கொடுத்துள்ளனர். (உ)

### பாஷையூரில் கட்டப் பொம்மன்

(ஈச்சமோட்டை)

பாஷையூர் புனித அந்தோனியார் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் காலஞ்சென்ற மதுரகவிப்புலவர் நீ. மிக்கோர்சிங்கம் எழுதிய 'வீரபாண்டிய கட்டப் பொம்மன்' நாட்டுக் கூத்து விரைவில் மேடை ஏற்றப்படவுள்ளது. (உ-59)

### பரீட்சைகள்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதல் தொகுதி அபிவிருத்தித் தொண்டர்களுக்கான எழுத்துப்பரீட்சை நாளை பி.ப. 2.00மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியிலும்,

செய்முறைப் பரீட்சைஎதிர் வரும்14,15ஆம் திகதிகளில் காலை9.00மணிக்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளை அடையாள அட்டை, பயிலுநர் தினக்குறிப்பேடு ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (உ-23)

### பயிற்சி

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் மகளிருக்கான தையல் பயிற்சிநடத்தப்பட்டு வருகின்றது.

இதில் 36 பயனாளிகள் பயிற்சி பெற்றுவருகின்றனர். (உ-23)

### சுற்றுலா

(ஈச்சமோட்டை)

இளவாலை திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக் கூடத்தைச் சேர்ந்த 50 சிறுவர்கள் ஆளுமை விருத்தி சுற்றுலா ஒன்றை இன்று மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் யாழ். நகரின் பல பகுதிகளுக்கும், தீவுப்பகுதி சாட்டி பிரதேசத்திற்கும் தமது சுற்றுலாவை மேற்கொள்ளவுள்ளனர். (உ-59)

## இடம்பெயர்ந்த மக்களுக்காக வடமராட்சியில் 50 அரை நிரந்தர வீடுகள்

(மந்திகை)

நூறுநாள்வேலைத் திட்டத்தின கீழ் வடமராட்சி பிரதேச செயலர்பிரிவில் 50அரை நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மயிலிட்டி, பலாலி, காங்கேசன் துறை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து கடந்த 10வருடங்களாகஉரிய வீட்டு வசதிகளின்றி அல்லலுறும் குடும்பங்களுக்கே இவ்வாறு வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன. (உ-23)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன் சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னதாக சுயாதீன ஆணைக்குழுக்களும் அரசியலமைப்புச் சபையும் அமைக்கப்படுமென நீதியமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார கடந்த புதனன்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

சுதந்திரத்தேர்தல் ஆணைக்குழு, சுதந்திரப் பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அரசியல் அமைப்புச் சபை என்பவற்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜே.வி.பி. யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தனது உரையில் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்தபோது மேற்கண்டவாறு குறிப்பிட்ட நீதியமைச்சர்,

முன்னைய எதிர்க்கட்சித் தலைவர் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத்தர மறுத்ததாலேயே இந்நடவடிக்கை தாமதமாகியதெனவும்,

தற்போது புதிய எதிர்க்கட்சித் தலைவர் பதவியேற்றுள்ளதால் இவை குறித்த சட்டமூலங்கள் விரைவில் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (உ)

## சிப்பாய் படுகொலை வழக்கு விசாரணை அ. புரத்திற்கு மாற்றம்

(மந்திகை)

மிருசுவில் ஒட்டு வெளிப்பகுதியில் சிப்பாய் ஒருவர் தன்னினச் சேர்க்கைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் அறிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை இராணுவ தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஜே. வி. ரி. விஜயகாந்த, வி. கே. விஜயகுமாரதுங்க ஆகியோர் கடந்த புதனன்று சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுடைய வழக்கு அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவித்த நீதவான், சந்தேகநபர்கள இருவரையும் சிறைச்சாலை அதிகாரிகளூடாக மார்ச் மாதம் 7 ஆம் திகதி அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் பணித்தார்.

இதேவேளை, கிளாலிப் பகுதியில் இரு படைவீரர்களுக்கிடையே ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர்களில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையும் அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுளளது. (உ-23)

### நாளை பரீட்சை

(உடுவில்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பயிற்சி பெற்ற முதலாம் தொகுதி அபிவிருத்தித் தொண்டர்களுக்கான பரீட்சை நாளை பி.ப 1.30 மணிக்கு யா-கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-129)

### அபிவிருத்தித் தொண்டர்கள் கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள இரண்டாவது தொகுதி, அபிவிருத்தித் தொண்டர்கள் மற்றும் போதனாசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகச் சம்பந்தப்பட்ட அபிவிருத்திப் பரிசோதகர் தெரிவித்தார். (உ-23)

### தினசரி தியானம்

## கோயில்

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

- அப்பர்

பெருந்தகையே, நீ வீற்றிருப்பதற்கேற்ற புனித விடுதியாக என்காயத்தைத் திருத்தியமைக்க நீ துணை புரிவாயாக.

இடிந்து பாழடைந்த வீட்டில் நல்லான் ஒருவன் குடியிருக்க விரும்பமாட்டான், அழுக்குப் படிந்த இல்லமும் அவனுக்கு ஒவ்வாது. கோமகன்களுக்கெல்லாம் கோமகன் கடவுள். அத்தகைய கோவுக்கேற்ற இல்லம் மனிதனது காயம். அது களிம்பு தோயாததாய் இருக்க வேண்டும், கடவுளை வரவேற்பதற்கேற்ற முறையில் காயத்தைத் தூயதாக்கி வைத்திருப்பது அவசியம்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# மொழிப் பொருளைப் பொன்போல் போற்றிய
# இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகர்

(யாழ்ப்பாணம்)

முன்னோர் மொழிப்பொருளைப் பொன்னேபோல்போற்றுதல் என்ற மரபு நிலைப்பட்ட சிந்தனைத் தளத்தில் நின்றவர் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெற்ற சிந்தனை அரங்கில் இலக்கணவித்தகர் நமசிவாய தேசிகர் என்னும் விடயம் குறித்து பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவின் தலைமையில் நடைபெற்ற இச்சிந்தனை அரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஆசிரியம், படைப்பாக்கம், வரலாற்றுப் பதிவு என்று தமிழ் தொடர்பான அவரின் செயற்பாடுகளை மூன்று வகைப்படுத்தலாம்.

ஆசிரியர் என்ற வகையில் பலமாணாக்கருக்குப் போதித்த வள்ளலாகத் திகழ்ந்தவர். அவர் எழுதிய உரைகள் கட்டுரைகள், விளக்கக் குறிப்புகள் அவரது ஆசிரிய நிலைச் செயற்பாட்டின் சான்றுகளாக அமைவன.

நாவலர், பொ. கைலாசபதி முதலியோர் பற்றிய இவரது எழுத்துக்கள் வரலாற்றுப் பதிவு முயற்சிகளாகும். அவரின் ஆளுமை பற்றிய கணிப்பிலும் கவனிப்பிலும் தனி முதன்மை பெறுவது அவரது ஆசிரியத்துவமாகும்.

சிந்தனை அரங்கில்
இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகர் பற்றி
கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆற்றிய உரை

ஆசிரிய நிலைச்செயற்பாட்டிலே அவர்புலப்படுத்தி நிற்கும் முக்கிய அணுகு முறை மூல ஆசிரிர்களையும்உரையாசிரியர்களையும் பேரறிஞர்களாக நியாயப்படுத்தும் போக்காகும் என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் கைலாசபதி

தமிழியல் ஆய்வில் கலாநிதி கைலாசபதி என்னும்பொருள் பற்றி பேசுகையில், தமிழ் ஆய்வியல் தமிழியல் ஆய்வாகப் புதியபரிமாணம்கொண்ட சூழ்நிலையில் அதில் மார்க்ஸியம் சார்ந்த வரலாற்றுப் பார்வையையும் திறனாய்வு அணுகு முறையையும் புகுத்திய முதல்வர்களாக பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதியும், பேராசிரியர் கலாநிதி சிவத்தம்பியும் விளங்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ஒரு பல்கலைக்கழக ஆய்வாளனாக அச்சிந்தனைகளை முன்னெடுக்க முற்பட்ட வகையில் கைலாசபதியின் வரலாற்றுப் பாத்திரம் முக்கியத்துவம் பெறுகின்றது.

தமிழரின் சமூக பண்பாட்டு வரலாற்றுச் செல்நெறியை மார்க்ஸியப்பார்வை அடியாக இனங்கண்டு காட்டுவது. இலக்கியஆக்கங்களைய தார்த்தவாத நோக்கில் மதிப்பிட்டு புதிய படைப்பாக்கங்களுக்கு உந்து விசையாக அமைதல் என்ற இருவகைநோக்குநிலைகளில் அவரது ஆய்வுச் செயற்பாடுகள் அமைந்தன. இவ்வகையில் அவர் தமிழியலில் ஒரு திசையறி கருவியாக திகழ்ந்தார்.

பாரதியாரைப்பற்றிய சரியான பார்வை முதன் முதலாக ஈழத்திலே தான் சுவாமி விபுலானந்தரால் கணிக்கப்பட்டது. 1955-1982ம் காலப் பகுதியில் கைலாசபதி பாரதியாரை உன்னத வரலாற்றுப் புருஷனாகப் பார்த்தார்.

கைலாசபதி அழகியல் பற்றி அக்கறை கொள்ளவில்லை என்பதை மறுக்க முடியாது. மார்க்ஸிய அழகியல்சிந்தனை தமிழ் இலக்கியச் சூழலில் 1980கள் வரை தனிக்கவனம் செலுத்தப்படவில்லை என்பதும் அழகியல் பற்றிப் பேசியோர் மார்க்ஸிய சமூதாயப் பார்வையின் எதிர்த்தரப்பினராக இருந்தனர் என்பதும் நோக்கத்தக்கது என்றார்.

கூட்ட முடிவில் கவிஞர் சோ. பத்மநாதன் இவ்வுரைகளைத் தொகுத்து உரை நிகழ்த்தினார். (எ)

## இராசி பலன்

10-2-2002
(தை 28 ஞாயிறு)
திரயோதசிமு ப 10.46 வரை
உத்திராடம் மு. இ 11. 24 வரை
ராகுகாலம் 5. 4- 6. 34
நல்லநேரம் 9. 34- 11. 04

**மேடம்**
தொழில் சிறப்பு, முயற்சி கைஉடும், அதிகாரம், நல்ல செய்தி.

**இடபம்**
பிரயாணம், மனச்சஞ்சலம் காரிய தாமதம், புதியதொழில் சிந்தை.

**மிதுனம்**
காரிய தடங்கல், எதிர்பாராத பிரச்சினை, வியாதி, போசன சுகம்.

**கடகம்**
வாகன வசதி, நல்லவரவேற்பு, சோகம், மனச்சஞ்சலம்.

**சிங்கம்**
காரியம்கைகூடும், தொழில் மேன்மை, சத்துரு ஜெயம், பொருள் சேர்க்கை.

**கன்னி**
ரோகம், காரியதாமதம், குடும்பக் கவலை, இசைனத் தொடர்பு.

**துலாம்**
பகைவரால் மனப்பயம், உடல் சோர்வு, திடீர்நன்மை முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
முயற்சி வெற்றி, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை, அன்னியர் சந்திப்பு.

**தனுசு**
தொழில் நன்மை, பொருள் விரயம், செல்வாக்கு குறைவு, காரிய தாமதம்.

**மகரம்**
அதிகயோசனை, காரியம் கைகூடும், பெரியோர்மதிப்பு, சொத்துக்களால் பயன்.

**கும்பம்**
பிரயாணக் கஷ்டம், உடல் வியாதி, சயனசுகக் குறைவு, திடீர் நன்மை,

**மீனம்**
காரிய அனுகூலம், பெருமையடைதல், தெய்வ தரிசனம், பொருளசேர்க்கை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

### யுத்த நிறுத்தங்களால் பயனில்லை
# இனங்களுக்கிடையே புரிந்துணர்வும்
# மனங்களில் சமாதானமும் மலர வேண்டும்
### மன்னர் மறை மாவட்ட ஆயர்பேட்டி

(மன்னார்)

வெறும் யுத்த நிறுத்தங்களால் மாத்திரம் எதையும் சாதித்துவிட முடியாது.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வும் மனங்களில் சமாதானமும் மலரவேண்டும் அப்போதுதான் இந்த நாட்டில் பல்லாண்டுகளாக தொடரும் போருக்கு முடிவுகட்ட முடியும்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசெப், சக்தி வானொலிக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் பேட்டியளிக்கையில்;

மற்றைய சமூகங்களைப் போன்று தமிழ் மக்களுக்கும் சகல உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என்றார்.

அத்துடன், சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவென்பதைச் சுட்டிக்காட்டிய அவர்,

அரசியல் மற்றும் தீவிரப் போக்குடைய கட்சிகளை இச்சமாதான நல்லெண்ணச் சூழலைக் குழப்பும் வகையில் நடந்து கொள்ளவேண்டாம் என வேண்டுகோள் விடுத்ததுடன்;

அரசின் சமாதான முயற்சிகளை குறுகிய சுய இலாபம் கருதி பயன்படுத்த வேண்டாம் எனவும்,

நாட்டு மக்கள் அனைவரும் இச்சந்தர்ப்பத்தில் தமது ஒத்துழைப்பை வழங்கி இந்தச் சிறிய தீவில் ஆனந்தமாய் அனைவரும்வாழ வழி சமைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (உ-3)

### திறந்தபல்கலை மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் கற்கை நெறிகளை மேற்கொண்டு வரும் மாணவர்களையும், சட்டமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களையும் இன்று பி.ப. 12.30 மணிக்கு நிலையத்தின் கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடுமாறு மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஜெ. ஜெயலன் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் நடைபெறவுள்ள சட்டமாணி அனுமதிப் பரீட்சைக்குரிய முக்கியமான தகவல்கள் வழங்கப்படவுள்ளதுடன்,

கற்கை நெறிகள், பரீட்சைகள் என்பவற்றை யாழ். பிராந்திய நிலையத்திலேயே நடத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அழுத்தங்களைப் பிரயோகிப்பது,

வளாகப் புனரமைப்பு மற்றும் கல்விச் செயற்பாடு வசதிகள் தொடர்பாகஆராய்ந்து முக்கிய முடிவுகள் எடுக்கப் படவுள்ளதாக அறியப்படுகிறது. (உ)

### திருமணம் செய்யாத
# இலங்கைப் பணிப்பெண்கள் 400 பேர்
# லெபனானில் தாய்மை அடைந்தனர்

(கொழும்பு)

லெபனானில் பணிப் பெண்களாகக்கடமையாற்றும் இலங்கைப் பெண்களில் சுமார் 400 பேர் திருமணமாகாமலே குழந்தைகளுக்குத் தாயாக உள்ளனர் என்ற திடுக்கிடும் தகவலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பொது முகாமையாளர் டபிள்யு.கே. முகனகே பத்திரிகையாளர் மாநாடொன்றில் வெளியிட்டுள்ளார்.

லெபனான்சென்றுஅங்குஇலங்கைப் பணிப் பெண்கள் படும் துன்பதுயரங்களை நேரில்கண்டறிந்தபொது முகாமையாளர் டபிள்யு கே முகனகே பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார் அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் லெபனானில் வேலை செய்யும் இலங்கைப் பணிப் பெண்கள் குறைந்த சம்பளத்தில் (சுமார்100 டொலர்) வேலை செய்வதினால் அவர்கள் களவாகவேறு இடங்களுக்கு வேலைக்குப் போகும்போதேஇவ் விபரீதங்கள் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய விபரீதங்களால் பாதிக்கப்பட்ட 400 இலங்கைப் பணிப்பெண்களையும் இலங்கைக்கு திருப்பி அழைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன் என்றும் அவர் தெரிவித்தார். (வ)

### தண்டப் பணம்
## அறவீடு

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித்துறை, அல்வாய், உடுப்பிட்டி, ஆகிய பகுதிகளில் வடமராட்சி மதுவரிப்பொறுப்பதிகாரி றொகான்சஞ்ஜேராஜூ தலைமையிலான மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற் கொண்ட கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையின் போது அகப்பட்ட 10 பேரில் 9பேர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களிடம் மொத்தமாக 5இலட்சத்து 41 ஆயிரத்து 500ரூபா குற்றப்பணமாக அறவிடப் பட்டது.

# நிரந்தர யுத்த நிறுத்தத்தை
# நோர்வேயும் கண்காணிக்கும்
### பிரதி வெளிவிவகார அமைச்சர் தகவல்

(ஒஸ்லோ)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்படவுள்ள நிரந்தர யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்படும் போது அதனைக் கண்காணிப்பதற்கு நோர்வே அரசு தயாராக இருப்பதாக நோர்வே அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கீசன் நோர்வே பத்திரிகைஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில்அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது;

நிரந்தர யுத்த நிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு உடன் படிக்கையின் அமுலாக்கத்தைக் கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந் நிலையில் நிரந்தர யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு பிரத்தியேகமான முறையில் நோர்வே அரசு தயாராக உள்ளது. இதற்கு இலங்கைஅரசும், விடுதலைப் புலிகளும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

யுத்த நிறுத்தக்கண்காணிப்பிற்கு அரசும் விடுதலைப் புலிகளும் சம்மதம்தெரிவித்துள்ள போதிலும் எங்கே?எப்போது? கைச்சாத்தாகும் என்ற விபரத்தைக் கூட ஹெல்கீசன் மறுத்து விட்டார். (வ)

## சிறு விளம்பரம்

### (OL) கணிதம்

பழைய, இடைக்கால, புதிய திட்டங்களுக்கமைய தொடர்ந்து கற்பிப்பதில் 37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்பஅறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் (Distinction) பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (4470)

### தேவை

மாலை நேரம் பயிற்சி கொடுக்கக் கூடிய தமிழ் ஆசிரியர் தேவை. யாழ் பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு (1மணிக்குப்பின்) ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4473)


# கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(மந்திகை)

கடந்த வருடம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்ட நீதிமன்ற ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை என நீதிமன்ற ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(செ-23)

# குருநகர் நிலையை நேரில் கண்டறிவு

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடி அமைந்துள்ள இடத்துக்கு யாழ்.மாநகர முதல்வர் எஸ். கந்தையன் நேற்றுச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்தார்.

மேற்படி பகுதி மக்கள் செய்த முறைபாடுகளை அடுத்து அங்கு சென்ற முதல்வர் அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தன் சக்திக்கு உட்பட்ட வகையில் உதவுவதெனத் தெரிவித்ததுடன்,

கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்யவும், மலசல கூடங்களைச் சீர்செய்வதற்கும், மலத்தியோன் தெளிக்கவும்உடன்நடவடிக்கை எடுத்தார்.

இதேவேளை, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற பொருளாதார வளம் தற்போதும் மாநகர சபையிடம் இல்லாத போதிலும் மனித வளத்தைக் கொண்டு செய்யக் கூடிய உதவிகளை உடனடியாகச் செய்வதெனவும் மக்களிடம் உறுதியளித்தார். (உ)

## அன்புக்காக ஏங்கி .

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏழை பங்காளன்

மரங்களை நாட்டி வளர்ப்பதும் பேணுவதும் சிறார் உடலுக்கும் உள்ளத்திற்கும் நலம் தரும் அருமருந்துகளாகும். தன்னுடைய கவனிப்பினாலும் உடல் உழைப்பினாலும் மரஞ்செடிகொடிகள்வளர்ந்து பசுமையும் வளமும் நல்கும் போதுசிறாருக்கு மனமகிழ்ச்சி கிடைக்கிறது அவற்றின்விளைபொருள் உணவாகப் பயன்படும் போது புதிய உற்சாகம் பிறக்கிறது. பகிர்ந்து உண்ணும் மனநிறைவு சிறாருக்கு உடல்நலம் தருவதாகும். கல்வி நிலையிலும் பயிர்ச் செய்கை பயனுள்ள முயற்சியாக எதிர்காலத்திற்கும் சிறந்த தொழில் வழிகாட்டியாகிறது. சிறுவர் மனம் பண்பட பயிர்ச்செய்கை பேருதவி செய்யும். இயற்கையின் துணையுடன் முளைத்து வளரும் செடியும் கொடியும் மரமும் வளர்ந்து காலத்துக் கேற்றபயன்களைத் தருவதை நேரடி அனுபவம்மூலம் காணும் சிறுவர் உள்ளம் தமக்கும் இயற்கை துணை செய்யும் என்ற நம்பிக்கையை உள்வாங்கிக்கொள்ளும். பருவ மாற்றங்களையும் இயற்கையின் ஆற்றலையும் கணித்து தொழிற்படும் பட்டறிவைச் சிறுவர் பெறவும் இது வாய்ப்பளிக்கும். சிறுவர்களின் எதிர்காலத்தை அவர்களே திட்டமிடவும் இப்பட்டறிவுநிலை உதவும்.

எனவே சிறுவர் இல்லங்கள் பலர் கூடி இழுக்கும் பாரிய தேராக இன்று விளங்குகின்றன. உலகிலேவாழும்கருணை உள்ளங்கள் அனைத்தையும் இணைக்கும் பெருங்கடலாக அமைகின்றன. தான்வாழ்ந்த மண்ணை விட்டு வேற்றுப் புலம் சென்று வாழ்பவர்கள் அனைவரும் அயராத முயற்சியுடையவர்கள். அவர்களின் உழைப்பின் ஒருசிறுதுளி இந்தச் சிறுவர் இல்லங்களின் பராமரிப்புக்காகச் சேரும் போது அது பெருவெள்ளமாக கருணைக் கடலிலேகலக்கிறது. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்ற நமது முன்னோரின் முதுமொழியும் எம்மைவழிநடத்தும் பிறந்த மண்ணில் ஆதரவற்று நிற்கும் சிறுவர்களின் நல்வாழ்வுக்காக தன் உழைப்பின் ஒரு பங்கை உதவும் ஏழைபங்காளன் வாழ்த்தப்பட வேண்டியவன். தெய்வப்பணியிலே தன்னை இணைத்துக் கொண்டவன். கல்லுக்குள் ஈரம் கசிவது போல அவன் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், விண்ணவர் போலப் போற்றப்பட வேண்டியவன். அவனுடைய கொடைக்கரம் சிறுவர் இல்லங்களை நோக்கி நீளும் போது அது பொற்கரமாகப் பொலிவுடன் தோன்றுகிறது. அந்தக் கரங்களை அன்புடன் மானசீகமாகப்பற்றிக் கொள்ளும் சிறார்கள் கடவுளின் கருணை பெற்றவராவர்.

காலமும் தூரமும் வேறுபட்ட போதும் எதிர்காலச் சிறுவரின் நலம் காக்கும் பணியில் எல்லோரும் இணையச்சிறுவர் இல்லங்களதுணை செய்யும் மனித விழுமியங்களைச் சிறுவர் அறியவும் எதிர்காலத்தில் சிறுவர் இக்கொடைப்பணியை மனமுவந்து செய்யவும் இல்லத்து வாழ்வியல் சிறந்ததொரு மரபுக்கையளிப்பாகும் கடல் கடந்த நாடுகளில் புகலிடம் தேடிப்போன மனிதர்களின் உள்ளத்திலே பதிந்தவடுக்கள் மறையவும், துன்பச் சுமைகள் குறையவும் இந்தக் கொடைப் பணி அருமருந்தாகும். கண்ணில் தோன்றாத சின்னஞ் சிறு உருவங்களின் மலர்ந்த முகங்களைக் கண்ணாரக் காண வேண்டும் என்ற அவா அப்போது நெஞ்சில் கனலும். அதற்கான காத்திருப்பில் வாழ்வு தொடரும். அதுவே மனித வாழ்வியலின் மரபுஎன்பதும்புரியும். சிறுவர் இல்லத்தில் வாழும் சிறாரின் கண்ணில் மின்னும் களிப்பு, மின்னல் போல வந்து கொடையாளரைத் தழுவ, இன்பச் சிலிர்ப்பில் இறைவன் தோற்றம் உணர்வில் வந்து படியும். இதுவே இறவாதஇன்பமாகும். □

## வலுவூட்ட . . .

ஒவ்வொருபெண்களினதும் சோகக் கதைகள் எமது இதயங்களைப் பிழிந்து எடுத்தன சிலர் தமது பிள்ளைகளின் படிப்பையே இடை நிறுத்தியுள்ளனர்.

கணவன் காணாமற் போயிருந்தமை, கணவன் தற்கொலைசெய்துகொண்டமை, கணவன் நோய்வந்து இறந்தமை, போர் கணவனைக் காவுகொண்டமை இழப்புகளின் காரணங்கள் பலவகைப் பட்டிருந்தன. இவர்களில் சிலர் இன்னும் மறுத்தல்என்ற (Denial) பாதுகாப்பு உளக்கலசம் அணிந்திருந்தனர்.

கல்வித் தரக்குறைவு நம்பிக்கை இன்மை, மூலதனம் இன்மை போன்ற காரணிகளால் எந்த வேலையும் செய்யாதவர்களாகவே பலர் உள்ளனர்.

இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனம் இவர்களில் ஐவருக்கு வலுவான ஓர் உதவிக்கரம் நீட்டியுள்ளது. இவர்களின் வாழ்வுப் பயணம் இலகுவாக ஆவதற்கு பெரு முயற்சி செய்துள்ள செஞ் சொற் செல்வர் ஆறு திருமுகன் அவர்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர் அவரது முன்மாதிரியைப் பலர் இனிமேல் பின்பற்றக்கூடும்.

பெண் தலைமை தாங்கி வழிநடத்த வேண்டிய உள்ள குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தில் ஏற்படுத்தப் படவேண்டும் அவர்களது உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும் திறன் விருத்திப் பயிற்சி அளிக்கப்பட்டு வலுவூட்டப்பட்டுச் சொந்தக் காலில் நிற்கும் நிலைக்குஇவர்கள் உயர்த்தப்பட வேண்டும் நெருக்கீட்டை எதிர் கொள்ளும் வழிமுறைகள் கற்பிக்கப்பட்டு சூழலில் உள்ள ஏனைய மக்களின் உதவி ஒத்தாசை கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

சாப்பிடும் போதுபூனையில் உள்ள மகிழ்வு மையங்கள் தூண்டப்படுவது போல பாதுகாப்பான இடத்தில் நித்திரை செய்யும் போதும் ஒருதிருப்தி ஏற்படுகிறது ஆறுதிருமுருகன் அவர்களின் உதவியோடு இத்தகு திருப்தியை ஐந்து குடும்பங்கள் இன்று முதல் பெறுகின்றன.

இந்த வலுவூட்டலோடு இவர்கள் தம் குழந்தைகளை நல்ல நிலைக்கு உயர்த்தி விடவேண்டும் என்று வாழ்த்துவதோடு, யாழ்ப்பாணத்தில் மொத்தமாக 22,000 விதவைகள் உள்ளனர் என்பதையும் அவர்களில் பலர் உணவுத் தேவை கூடப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளனர் என்பதையும் அறவோருக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு படுத்த விரும்புகிறேன்.

கந்தரோடை அன்னையர் குடியிருப்புஒருமாதிரிச் செயற்பாடாக எமக்கு வழிகாட்டட்டும்.

# அறிவித்தல்
## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல்நடைமுறைக் கோவையின் 528ம் பிரிவின் கீழான விண்ணப்பம் தொடர்பில் இறந்தவர்கள் குமாரசாமி சிறீதரனும் பெண் லோகேஸ்வரியும்

வழ.இல. தத்துவம்/24
1) சிறீதரன் ஜெயசாந்தினி
2) சிறீதரன் இராஜகிளி
3) சிறீதரன் ஜெயந்தினி
4) சிறீதரன் ஜெனசன்

அனைவரும் பராயமடையாதவர்கள்-தோற்றம் தங்கள் ''அடுத்த நண்பன்'' குமாரசாமி இராமச்சந்திரன், மூலம் 113 பலாலி வீதி, யாழ்ப்பாணம். மனுதாரர்கள்.

இவ்வழக்கில் 2002ம் ஆண்டு தை மாதம் 09ம் திகதியன்று இட்ட கட்டளையின் பிரகாரம் மேற்குறித்த 1-4ம் மனுதாரர்களின்தந்தையார் குமாரசாமி சிறீதரனும் தாயார் சிறீதரன் பெண் லோகேஸ்வரியும் ஓட்டோ வண்டியில் 27-03-2000ம் திகதியன்று தங்கள் வீட்டிற்குச் செல்லும் வழியில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் சிக்குண்டு அகால மரணமடைந்துள்ளபடியால் அவர்களின்சொத்து அவர்களின் பராயமற்ற பிள்ளைகளாகிய 1-4 மனுதாரர்களுக்கு சென்றடைய வேண்டுமென்பதால் பராயமற்றவர்களின அடுத்த நண்பனாக குமாரசாமி இராமச்சந்திரன் என்பவர் 17-10-2001ல நியமனம் பெற்றுள்ளார் என்பதாலும்,

படிவம் 87ஏ யில் குடியியல் நடைமுறைக்கோவையின 531 (1) (6) (11)ம் பிரிவின் பிரகாரம் மனுதார்களாகிய இறந்தவர்களின் நான்கு வாரிசுகளுக்கும் ஆஸ்திகள் அனைத்திலும் சமமான 1/4 பங்கு உண்டென வாரிசுச் சான்றிதழ் கட்டளை வழங்க வேண்டுமென்றும் கோரியிருப்பதாலும்,

அக்கறை உள்ள எவராவது 2002ம் ஆண்டு மாசி மாதம் 28ம் திகதி முற்பகல் 9.00 மணிககு இந்நீதிமன்றத்தில் தோன்றி ஏன் மேற் கூறியவற்றை ஏற்றுக் கொள்ளக்கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் வேண்டப்படுகின்றீர்.

2002ம் ஆண்டு தை மாதம் 21ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

**து. சிறீமோகன்**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைந்தது
எஸ். கந்தசாமி
ஜே.பி.யு.எம்
மனுதாரர்களின் சட்டத்தரணி

(4273)


# கலைவாணி கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழாவும் கலைச்சுடர் மலர் வெளியீடும்

தலைவர்; திரு. சி. சிவரூபன்
நிறுவன இயக்குனர்)

காலம்; இன்று (10-02-2002) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி

இடம்: கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மண்டபம்

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் கலாநிதி திரு வ. ஆறுமுகம்
(வாழ்நாள் கல்வியியல் பேராசிரியர், யாழ். பல்கலைக் கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. ப. கார்த்திகேசு
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி சுன்னாகம்)
திரு. பா. திலகராஜா
(உப அதிபர், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்)

## நிகழ்ச்சி நிரல்:

மங்கள விளக்கேற்றல்:
இறை வணக்கம்:
தமிழ்த்தாய் வாழ்த்து:
வரவேற்புரை: செல்வன் க. ஐங்கரன் (மாணவ தலைவர்)
தலைமை உரை: சி. சிவரூபன் (நிறுவன இயக்குநர்)
ஆசியுரை: சிவஸ்ரீ ப. சண்முகராஜகுருக்கள் (பலானை கண்ணகி அம்மன் தேவஸ்தானம்)
பிரதமவிருந்தினர் உரை:
வெளியீட்டு உரை: திரு. வி. குணசேகரம் (அதிபர், கோ/நாவலர்/வி/சாலை)
வாழ்த்துரை: திரு. சு. யோகராசா (அதிபர், உரு/சைவத்தமிழ் வித்தியாலயம்)
திரு. ந. சிவகடாச்சம் (அதிபர், கோ/கிறிஸ்தவக் கல்லூரி)
திரு. ந. சண்முகரட்ணம் (அதிபர் கோ / சரவணபவானந்த வித்.
ஆய்வுரை: மு. திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)
இதழ் ஆசிரியர் உரை:
திரு. த. மோகன் ராஜ்
முதல் பிரதி பெறுபவர்:
திரு. எஸ். இராமச்சந்திரன்
நன்றியுரை;: செல்வி க. கார்த்திகா (மாணவர் மன்ற செயலாளர்)

**'மாணவர் கலை நிகழ்ச்சிகள்'**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கலைவாணி கல்வி நிலையம்**

(C/3513)

## இன்று ஒரு தகவல்

## இயலாத செயல் என்ன?

ஒருவன் தான் அன்பாகவும், ஆசையாகவும் வளர்த்து வரும் பூனை யாருமில்லாத சமயத்தில் அடுப்பங்கரையில் நுழைந்து உணவுப் பொருள்களைத் திருடி உண்பதைக் கண்டு கோபம்கொண்டான். பூனையைப் பார்த்து 'நான் உனக்கு என்ன குறை வைத்தேன். ஏன் இப்படித் திருடித் தின்கிறாய்? ஒரு மாதம் மட்டும் நீ திருடித் தின்னாமல் இரு அதன் பிறகு நாள் தோறும் நான்உனக்குவிருந்து வைக்கிறேன். தங்கத்தாலான அழகிய கழுத்துப் பட்டை உனக்கு அணிவிக்கிறேன். என்ன சொல்கிறாய்' என்று கேட்டான்.

அதற்குப் பூனை 'என்னால் இயலாத செயலைச் செய்யச் சொல்கிறீர்களே, எப்படிச் செய்வேன்?' என்றது. 'ஒரே ஒரு மாதம் உன்னால் திருடித் தின்னாமல் இருக்க முடியாதா?' என்று கேட்டான் அவன். அதற்கு அந்தப்பூனை என் தந்தையும் திருடும் பண்பு உடையது, என் தாயும் திருடும் பண்பு உடையது, என் தந்தைக்குத் தந்தையும் திருடும் பண்பு உடையது. எங்கள் இனமே திருடும் பண்பு உடையது. நான் மட்டும் எப்படித் திருடாமல் இருக்க முடியும்?' என்று பதில் சொன்னது.

பேராசிரியர் எ. சோதி

# ஆட்கடத்துவோரைக் கண்டறிய பொலிஸ் குழுவிரைவில் ஆஸிசெல்லும்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து படகுகள் மூலம் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குஆட்களைக் கடத்துவோரைக் கண்டறிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தற்போது அவுஸ்திரேலியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 20 இலங்கையர்களை விசாரணைக்குட்படுத்தும் நோக்கில் ஓரிரு நாட்களில் இன்ரபோல் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இலங்கை பொலிஸ் குழுவொன்று அவுஸ்திரேலியா செல்லவுள்ளது.

மேற்படி 20 பேரையும் விசாரணைக்குட்படுத்துவதன் மூலம் இவர்களைப் படகுகளில் அனுப்பியவர்கள் தொடர்பான விபரங்களைப் பெறமுடியுமெனப் பொலிஸார் கருதுகின்றனர். (உ)

## 15 கோடி கிலோ அரிசி மாதம் ஒன்றுக்கு தேவை

(கொழும்பு)

மாதம் ஒன்றுக்கு சுமார் 15 கோடி கிலோகிராம் அரிசி தேவைப்படுவதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் தெரிவித்துள்ளது.

நாள் ஒன்றுக்கு 50 இலட்சம் கிலோகிராம் அரிசி நுகர்வோரால் கொள்வனவு செய்யப் படுகிறது என்றும் அந் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ளூர் சந்தைகளில் வெள்ளை, சிவப்பு, பச்சையரிசிக்குஓரளவுதட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இதனால் 120 இலட்சம் கிலோகிராம் வெள்ளைப் பச்சை அரிசியை இறக்குமதி செய்வதற்கானஅனுமதி தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும்,

அத்துடன், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை கொள்வனவு செய்வதற்காக 300 மில்லியன் ரூபாவை அரசாங்கம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்கியுள்ளது. (உ-3)

## பற் சிகிச்சைகளுக்கான இயந்திரம் பொருத்துகை

(நவக்கிரி)

பல் அடைத்தல் மற்றும் பற் துப்புரவு சிகிச்சைக்கான உபகரணங்கள் இன்னும் ஓரிரு தினங்களில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் பொருத்தப்படவுள்ளன.

இவைபொருத்தப்பட்டதும் இப்பகுதியை அண்டிய மக்கள் பற் சிகிச்சைகளுக்காக வேறெங்கும்செல்லவேண்டிய நிலை இருக்காது எனவும் கூறப்படுகிறது.

தற்போது புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் இவ்வைத்தியசாலையில் இடம்பெறும் பல் கிளினிக்கில் பெருந்தொகை மக்கள் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-233)

### பருத்தித்துறை ஆஸ்பத்திரியில்

## சேலைன், குளுக்கோஸிற்கு பெரும் தட்டுப்பாடு

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேலைன்.குளுக்கோஸ் என்பவற்றுக்குபெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்தசில மாதங்களாக நெருப்புக் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல் நோய்க்காக பெருமளவானோர் சிகிச்சை பெற்றமையாலும்,இம் மருந்துகள் சுகாதாரத் திணைக்களத்தினால் குறைந்தளவில் அனுப்பப்பட்டமையுமே இத் தட்டுப்பாட்டிற்கு காரணம் எனவும்தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நோயாளர்களிடம் மேற்படி மருந்துகளை தனியார் மருந்துக் கடைகளில் வாங்கிவருமாறும் பணிக்கப்படுகிறது. (செ-23)

### முறைசாராக்கல்வி

## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(மந்திகை)

வடமராட்சி கல்விவலய முறைசாராக் கல்விப்பிரிவினால் பாடசாலையில் இருந்து வெளியேறியவர்களிடமிருந்து பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் இப்பயிற்சி நெறிக்குவிண்ணப்பிக்கலாம்.

கணனி, வானொலி,தொலைக்காட்சி திருத்தம் கணக்குப் பதிவியல், உடையமைத்தல், துணி அச்சிடல் மனை முகாமைத்துவம்,தலை அலங்காரம், தமிழ் . ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து, வீட்டுமின்னிணைப்பு ஆகிய பயிற்சிநெறிகளுக்குவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்சிபெற விரும்புவோர் இம்மாதம் 18ம்திகதிக்குமுன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-23

## விசாரணைகளுக்கு வருமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து 1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாக கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு விசேட புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

★ யோசப் மகேஸ்வரி கொழும்புத்துறை கிழக்கு, (கோ. இல. பி. ஐ-56, பி. ஐ-119)

★ உமா கண்ணன் கைதடி, நுணாவில், (பி. ஐ-9/195)

★ பிள்ளையார் பாஸ்கரன் இ. பிள்ளையார்தனங்கிளப்பு சாவகச்சேரி, (கோ. இல. ஐ. ஆர்-97)

★ கந்தசாமி ரவிச்சந்திரன் லலிதாரவிச்சந்திரன், கோண்டாவில் கிழக்கு, (கோ. இல. பி. -ஐ9/233)

★ யேசுதாசன் ஸ்ரான்லி ஜீவா யேசுதாசன் பிரசன்னா நாவற்குழி-கைதடி, (கோ. இல. பி. ஐ-9/152) (உ-10)

## அபிவிருத்தி தொண்டர்களுக்கு எழுத்துப் பரீட்சை

(மந்திகை)

வடமராட்சிப் பகுதி அபிவிருத்தித் தொண்டர்களுக்கான எழுத்துப் பரீட்சை நாளை திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதற் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களை இந்த எழுத்துப் பரீட்சையில் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (செ-23)

## புதியகட்டடத் திறப்பு விழாவும் ஒன்று கூடலும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிறுவர் நிறைவாழ்வு இல்ல புதியகட்டடத்திறப்பு விழாவும் பெற்றோர், பாதுகாவலர் ஒன்று கூடலும் இன்று பி.ப.2மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யு. என். எச். சி. ஆர். யாழ். அலுவலக பொறுப்பதிகாரி ரீற்றோ தோமஸ்,நல்லூர் பிரதேசசெயலர் நா.வேதநாயகன்,நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன்,சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி க.சிவராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## எழுத்துப் பரீட்சை

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பயிற்சி பெற்ற முதலாவது பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கான எழுத்துப் பரீட்சை நாளை திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-120)

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இணைக்கப்பட்ட விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப இறுதித் திகதி எதிர்வரும்15ஆம்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பீடாதிபதி அறிவித்துள்ளார். (உ)

## ப.நோ.கூ.ச கிளை திறப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை ப.நோ. கூ. சங்கத்தின் புளியங்கூடல் 10 ஆம் கிளை கடந்த 10 வருடங்களின் பின்னர் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. (உ-75)

## ஒலிபெருக்கியால் பயன்

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு, சுகாதாரத் திணைக்களத்தினால் ஒலிபெருக்கி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒலிபெருக்கியின் உதவிகொண்டு டெங்குக் காய்ச்சல் உட்பட ஏனைய தொற்று நோய்கள் தொடர்பான விழிப்பை ஏற்படுத்தும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-23)

## கல்வி நிர்வாக சேவையில் மூன்றில் இரண்டு பங்கு வெற்றிடங்கள் உள்ளன

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் மூன்றில் இரண்டு பங்கு வெற்றிடங்கள் நிலவுவதாக கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் கல்வி நிர்வாக சேவையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

இந் நடவடிக்கையின் கீழ் தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில், இலங்கை ஆசிரியர் சேவை யாப்பை திருத்தி அமைக்கவும், ஆசிரியர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சியளிப்பதற்கும் திட்டமிட்டுள்ளதாக கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-3)

## முதலாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

100நாள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களிற்கு போசாக்கு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பிரகாரம்,முதலாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களினதும் பெயர்,பிறந்த திகதி,வயது,உயரம், நிறை ஆகிய விபரங்களை விரைவாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு,தீவக வலயக்கல்வி பிரதிப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அறித்துள்ளார். (உ)

## சகோதரர் மூவருக்கு 13 ஆம் திகதி வரை விளக்க மறியல் உத்தரவு

(மந்திகை)

மீசாலைப் பகுதியில் கடந்த வருடம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சகோதரர்களான மூவரும் கடந்த புதனன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மேற்படி சம்பவத்தையடுத்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டதும், பெற்றோர் அண்மையில் நீதிமன்றில்ஆஜர்செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

தம்பு மகேஸ்வரன், தம்பு சிவகுமார்,தம்பு கிருபாகரன் ஆகிய மேற்படி மூவரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது,அடுத்த மாதம் 13 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் உத்தரவிட்டார். (உ-23)

## சிந்தனைக்கு விருந்து

### தருமம் இறுதியில் வெல்லும்

வானரச் சேனையுடன் வந்தசீ ராமனவன்<br>
தானிகரில் பல்கோடி ராக்கதரைத்-தானழித்தான்<br>
என்றால் தருமம் இறுதியில் வெல்லுவதை<br>
நன்றாகக் சாட்டினான் நம்பு.

'பழையவன்'

# ஆயுதங்களைக் கையாளும் விடயம் அமெரிக்கா கனடா இடையே பிணக்கு

(வாஷிங்டன்)

ஆயுதங்கள் தொடர்பான விவகாரத்தில் அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

ஆயுதங்கள் தொடர்பாக அமெரிக்கா கடைப்பிடிக்கும் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை என கனடா குற்றம் சாட்டியுள்ளதுடன், ஆயுதக் கட்டுப்பாடு, ஆயுத உற்பத்தியை குறைப்பது, ஆபத்து கூடிய ஆயுதங்களை பாவிப்பது ஆகிய விடயங்களில் அமெரிக்கா தவறான பாதையில் செல்வதாக கனேடிய உதவிப் பிரதமர் ஜோன் மல்லே தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க உறுதி பூண்டுள்ள போதிலும் ஆயுத விவகாரங்களில் அமெரிக்கா பின்பற்றும் கொள்கைகள் ஏற்புடையது அல்ல எனவும் கனேடிய உதவிப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய நாடுகள் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றன, என கடந்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்த கருத்துக்கும் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார். (உ-3)

# ஜேர்மன் நாட்டில் வேலையற்றோர் தொகை 4 மில்லியனை தாண்டியது

(பெர்லின்)

ஜேர்மனியில் வேலையற்றோர் தொகை 4 மில்லியனை தாண்டி விட்டதாக அவ்வரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

ஜேர்மனியில் வேலை செய்யக் கூடியவர்களில் 10.4 வீதமானவர்கள் வேலையின்றி இருக்கின்றனர்.

ஜேர்மன் தொழில் வாய்ப்பு நிறுவனங்கள் வேலை தேடுபவர்களில் இரண்டில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுத்ததாகக் கூறிய போதிலும் அண்மையில் நடத்தப்பட்ட கணிப்பீட்டில் ஐந்தில் ஒருவருக்கே இவ்வாறு வேலை வழங்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (உ-10)

# உலக தரிசனம்

## பாகிஸ்தான் பற்றிய இந்தியக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை

(புதுடில்லி)

பாகிஸ்தான் தொடர்பான தமது கொள்கையில் தற்போதைக்கு எவ்விதமான மாற்றமும் இல்லையென இந்திய உள்த்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் குறித்து தங்கள் கொள்கையினை மாற்றி வருவதாகப் பாகிஸ்தான் கூறுவது சர்வதேச சமூகத்தினை ஏமாற்றும் வித்தை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பயங்கர வாதிகளுக்குப் பயிற்சி அளிப்பது, நிதியுதவிகளை மேற்கொள்வது ஆகியவற்றைக் கைவிடுவதுடன், இந்தியாவிற்குள் ஊடுருவும் பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் மேற்கொண்டால் அந்த நாட்டு அரசுடன் மீண்டும் சமாதான முயற்சிகள் பற்றிய பேச்சை ஆரம்பிப்பது குறித்து ஆலோசிக்கலாம் எனவும் அத்வானி குறிப்பிட்டுள்ளார். (உ-10)

## இந்தியாவும் - ரஷ்யாவும் ஆயுத தளபாடங்களை இணைந்து தயாரிக்க உடன்படிக்கை

(புதுடில்லி)

ஏவுகணைகள், போர்விமானங்கள் [illegible] செயற்கை கோள்கள் நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் யுத்தடாங்கிகள் போன்றவற்றினை இணைந்து தயாரிக்கும் மூன்று ஒப்பந்தங்களில் இந்தியாவும் ரஷ்யாவும் கையெழுத்திட்டுள்ளன.

லேசர் முறை மூலம் இயக்கப்படும் கிராஸ்னோ போல் ஏவுகணையை இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கும் ஒப்பந்தமும் இதில் அடங்கும்.

எனினும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இராணுவத் தளபாடங்கள் விமானம் தாங்கி கப்பல்கள் மற்றும் நெடுந்தொலை தூரம்சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகள், அணுவாயுதம் தாங்கிய நீர்மூழ்கிக் கப்பல்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் எதுவும் கையெழுத்தாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (உ-10)

## இந்திய- பாகிஸ்தான் சமாதான பேச்சுக்கு உதவ கோபிஅனான் தயார்

(புதுடில்லி)

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்த உதவ தான் தயாராக உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் கருத்து தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் உடன்பாட்டுடன் பேசித் தீர்க்க வேண்டும் எனவும், எல்லையில் தமது படைகளை இரண்டு நாடுகளும் மீளப் பெற்றுக்கொண்டால் இது சம்பந்தமாக மீள் பரிசீலனை செய்து இரு நாட்டுப் பிரச்சினையையும் தீர்க்க தாம் எப்போதும் தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

## இந்தியப்படை வீரர் பலி

(புதுடில்லி)

ஜம்முவின் அஸ்விேனோமுன்னரங்க பகுதிகளில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்தியப் படைவீரர் ஒருவர் பலியாகியுள்ளார்.

எல்லைக்கு அப்பால் இருந்து பாகிஸ்தான் படைகள் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் காயமடைந்த பின்னர் அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட போது அங்கு உயிரிழந்துள்ளார். (உ-10)

## நீதிவிசாரணைகளினின்றும் ஐ. நா, சபை விலகியது

(போனோம்பென்)

1970 ஆம் ஆண்டு கம்போடியாவில் இடம்பெற்ற 17 இலட்சம் பேரின் உயிரிழப்புகளுக்கு காரணமானவர்கள் எனக் கூறப்படும் முன்னாள் கம்போடிய கெரில்லா தலைவர்களுக்கு எதிராக நடைபெறவுள்ள நீதி விசாரணைகளில்இருந்து ஐக்கிய நாடுகள் சபைவிலகிக்கொண்டுள்ளது.

இதற்கெனவிசேடமாக நிறுவப்பட்டுள்ள நீதிமன்றம் பாரபட்சம் இன்றி செயற்படும் என தம்மால் உத்தரவாதம் வழங்க முடியாது எனக் கூறியே ஐக்கிய நாடுகள்சபை இதில் இருந்து விலகிக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக கம்போடியாவுடன் நடத்தப்பட்டு வந்த பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினத்துடன் கைவிடப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் சட்டப் பேரவைத் தலைவர் கன்ஸ் கோரல் தெரிவித்துள்ளார். (உ-3)

## மூன்று பாகிஸ்தானியர் டில்லிபொலிஸாரால் கைது

(புதுடில்லி)

கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க தகவல் மையத்தில் கடந்தஜனவரியில்இடம்பெற்ற பயங்கர வாதத் தாக்குதலில் தொடர்புடையமூன்று பாகிஸ்தானியர்களை புதுடில்லி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த மூவரும் பங்களதேஷ் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்த ஒரு கும்பலைச் சேர்ந்தவர்கள் என அறியப்பட்டுள்ளது.

விசாரணை தடைப்படும் என்ற காரணத்தினால் இவர்கள் தொடர்பான தகவல்களை வழங்க புதுடில்லிப் பொலிஸார் மறுத்துள்ளனர். (உ-10)

## இந்திய நாடாளுமன்ற தாக்குதல் ஐரோ. நாடாளுமன்றம் கண்டித்து தீர்மானம்

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்றம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிக்கும் தீர்மானம் ஒன்றினை ஐரோப்பிய நாடாளுமன்றம் நிறைவேற்றியிருக்கிறது.

டிசம்பர் மாதம்13ஆம் திகதி இடம்பெற்ற இத் தாக்குதல்கள் சுதந்திரம் அடைந்தது முதல் தடையின்றிச் செயற்படும் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட ஒரு சவால் என்றும் இத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ.10)

# விளையாட்டு செய்திகள்

## இந்தியாவுடன்பாக். அணி விளையாடத் தயார் முஷாரப் அதிரடி அறிவிப்பு

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிராக,எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் விளையாட பாகிஸதான் அணி தயாராகவுள்ளதாக அந்நாட்டு அதிபர் பெர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் நாடு தொடர்ந்தும் பயங்கரவாதத்தினை ஊக்குவித்து வருவதாகக் கூறி அந்நாட்டு அணியுடன் இந்தியக் கிரிக்கெட் அணி விளையாடமாட்டாது என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முன்னர் கூறியதும்,

இதனால் கனடாவில் கடந்த ஆண்டு இடம்பெற்ற 'சஹாரா' வெற்றிக்கிண்ணப் போட்டி தடைப்பட்டதுடன கனடா அரசிற்கு லட்சக் கணக்கில் நட்டம் ஏற்பட்டதும்,

இது ஒரு அநாகரிகமான செயல் என இந்திய அரசைப் பாகிஸ்தான் சாடியதும்தெரிந்ததே. (உ-10)

## நியூசிலாந்து அணி வெற்றி வாய்ப்பை இழந்தது

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று முடிந்த ஒரு நாள் முக்கோண கிரிக்கெட் போட்டித் தொடரில் தென்னாபிரிக்கா அணி சம்பியனானது.

நேற்று முன்தினம் சிட்னியில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து அணிகள் பங்கு பெற்றன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 41.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மேலும் இப் போட்டியில் பங்கு பற்றிய மற்றைய அணியான அவுஸ்திரேலியா அணி இறுதிப் போட்டியில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தை இழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

## விளையாட்டுப் போட்டி

(சுன்னாகம்)

தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்ட யா- தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுளளது. (உ-207)

★ ★ ★

(சுன்னாகம்)

யா- கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வலுநர் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் சி. நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் உடுவில் கல்விக் கோட்ட அதிகாரி அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், கோட்டைக்காடு மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய அறங்காவலர் சபைத் தலைவர்இ.ஆனந்தன்,சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-207)

## ஒருநாள் கிரிக்கெட் போட்டி

(சுன்னாகம்)

மயிலணி வடக்கு ஜனசக்தி விளையாட்டு கழகத்திற்கும் அச்சுவேலி கலைமகள் விளையாட்டு கழகத்திற்கும் வருடா வருடம் நடைபெற்றுவரும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் ஒன்பதாவது வருடத்திற்கான போட்டி இன்று காலை 9 மணிக்கு ஜனசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-207)

## சான்றிதழ் வழங்கலும் கண்காட்சியும்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில், கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியில் பயின்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், கண்காட்சியும் அண்மையில் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது. (உ-23)

## சீருடை விநியோகம்

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான இலவச சீருடை விநியோகம் நேற்று முன்தினம் முதல் இடம் பெற்று வருகின்றது. (உ-23).

வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

- குறள் -

## வலம்புரி

### புதியதொரு பரிமாணம்

இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையின் உதவியுடன், கணவனை இழந்த வறுமை நிலையுள்ள ஐந்து குடும்பப் பெண்களை தெரிந்தெடுத்து அவர்கள் குடியிருப்பதற்கான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நல்ல கைங்கரியத்தின் சிறப்பு நிகழ்வு இன்று நடைபெறுகிறது.

யுத்தத்தால் குடும்பத் தலைவனைப் பறிகொடுத்த இளம் விதவைப் பெண்கள் தமது குடும்பச் சுமையால் பெருங் கஷ்டத்தை எதிர்நோக்கி உள்ளனர். அதிலும் இருப்பதற்கோர் குடிசை தனிலும் இல்லாது இளம் பிஞ்சுகளோடு அவர்கள் படும் துன்பங்கள், சொல்லும் தரமன்று.

இவற்றையெல்லாம் தனவந்தர்களும் அரச உயர் அதிகாரிகளும் பார்த்து பரிதாபப்படுவது போல முகபாவம் செய்கின்றனரே தவிர உருப்படியாக, எதுவும் செய்யவில்லை. பக்கத்தில் இருப்பவர் துன்பம் தன்னைப் பார்க்கப் பொறாதவன் புண்ணிய மூர்த்தியென்று பாரதி பாடிய, பாடல்கள் வெறும் எழுத்து வடிவிலும், வார்த்தை வடிவிலும் இருக்கின்றதே தவிர அதற்கு உயிர் கொடுப்பார் எவருமில்லை.

இத்தகைய ஓர் சூழ்நிலையில், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் இலண்டனுக்கு மேற்கொண்ட ஆன்மீகப் பயணம் சமுதாயத்தில் மறுமலர்ச்சியை, விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. பணம் படைத்தவர்களுக்கும், உதவி செய்ய வழியிருந்தும் பாதை தெரியாமல் இருந்தவர்களுக்கும் இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையின் உதவியோடு திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் மேற்கொண்ட பணி, ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அரசாங்கத்தையும், அரச அதிகாரிகளையும் நம்பியிராமல் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனப் புறப்பட்டால், அதில் நேர்

# அன்புக்காக ஏங்கித்தவிக்கும் இளம் பிஞ்சுகளை அணைக்கும் உள்ளங்கள் ஒன்று சேர வேண்டும்!

இன்று உலகம் எங்கும் பரவலாகப் பேசப்படும் பொருள் சிறுவர் நலக்காப்பாகும். பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் அன்புக்காக ஏங்கி அலைந்து திரிகிறார்கள். பெற்றோரை இழந்தும் பிரிந்தும் தனியாகி நிற்கிறார்கள். ஏதும் அறியாத இளம் பிஞ்சுகள், அடைக்கலம் தேடி, வீதிகளிலே விழியில் நீர் வழிய நடந்து செல்கிறார்கள். இயற்கை நிலையிலும், செயற்கை நிலையிலும் இவர்களுடைய வாழ்வுச் சூழல் திடீரென மாற்றம் பெற்றதால், செய்வது அறியாமல் திகைத்து நிற்கிறார்கள். தமது எதிர்காலம் பற்றிய வழி நடத்தல் கிடையாமல் விலங்குகளைப் போல உணவையும் உறையுளையும் தேடித் தவிக்கிறார்கள். காலத்தின் வேகமான சூறைக் காற்றுச் சுழற்சியிலே சிக்குண்டு, செல்லும் திக்குத் தெரியாமல், மிரண்ட பார்வையுடன் சந்தியிலே நிற்கும் பிஞ்சுக் கரங்களைப் பற்றி அன்புடன் அரவணைத்து அழைத்துச் செல்லும் பண்பான உள்ளங்கள் இன்று ஒருங்கிணைய வேண்டும். அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன.

**குடும்ப அமைப்பு குலைவு.**

குடும்பம் என்ற சமூகக் கட்டமைப்பு நிலையில் குழந்தை ஒரு முக்கிய இணைப்பாகக் கருதப்படுகிறது. ஆனால் இன்று, இந்நிலை மாற்றம் பெற்று வருகிறது. ஆணும், பெண்ணும் மனமொத்து ஒன்றாக ஓரிடத்தில் நிலையாக வாழும் போது குழந்தை அவர்களின் இணைப்புப் பாலமாக விளங்கியது. கூட்டு வாழ்க்கையின் குதூகலத்தை உணர்த்தியது. வாழ்வியலின் வளர்ச்சிப்படிகளை விளக்கியது. பெற்றோர் என்ற தகுதிப்பாட்டை ஆணும் பெண்ணும் பெற வழிவகுத்தது. ஆனால் மனமொத்த குடும்ப அமைப்பிலே விரிசல் ஏற்பட்ட போது குழந்தையின் நிலையான புகலிடம் தொலைந்தது. பெற்றோர் ஒருவரையொருவர் பிரிய நேர்ந்த போது குழந்தையின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பாயிற்று. தாய், தந்தை என்ற ஒன்றிணைந்த உறவின் பலம் அற்றுப் போக குழந்தை ஆதரவற்றுப் போனது. மேலும் பிரிந்த தாயும் தந்தையும் மறுமணம் என்னும் புதிய உறவில் இணைந்த போது குழந்தை குடும்ப அமைப்பிலிருந்து வெளியே தூக்கி வீசப்பட்டு வீதியிலே விழுந்தது. வாழும் சூழலிலே மாறுதல்கள் திடீரென தோன்றிய போது குடும்பக் கட்டுக்கோப்பு அறுந்தது. இயற்கையான செல்நெறியிலே இடர்ப்பாடுகள் ஏற்பட்ட போது குழந்தை இழப்புகள் பலவற்றைச் சந்திக்க நேர்ந்தது. பெற்றோரையும் உறவினரையும் இழந்து இடம் பெயர்ந்து வாழும் நிலைக்கு ஆளானது. அன்பான அரவணைப்பையும்ஆறுதலையும் இழந்து திக்கற்ற காட்டில் வாழும் வாழ்க்கையில், தன்னை இணைத்துக் கொள்ள நேர்ந்தது.

**திக்கற்ற சிறார்.**

உலகத்திலே பல்லாயிரம் சிறுவர்கள் கொடிய போர் என்னும் செயற்கைச் சூறாவளியால் தாக்குண்டு தனித்து நிற்கிறார்கள். அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றவற்றைத் திட்டமிட வேண்டிய பாரிய பணி எமக்கு உண்டு. அவரவர் வாழும் மண்ணிலே திக்கற்றுப் போன சிறாரின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அயராது உழைக்க வேண்டியுள்ளது. மேலை நாடு, கீழை நாடு என்ற சூழல் வேறுபாடின்றி எதிர்காலத்திற்காக உருவாக்கப்பட வேண்டிய நல்ல மனிதர்கள் என்ற எண்ணத்தோடு செயற்பட வேண்டியுள்ளது. இன்று பல சிறுவர் நலக் காப்பகங்கள் உலகெங்கும் செயற்பட்டு வருகின்றன. எனினும் அவற்றின் செயற்பாடு மேலும் விரிவாக்கம் பெற வேண்டியுள்ளது. குறிப்பாக இடம் பெயர்ந்து, புலம் பெயர்ந்து வாழும் வாழ்வியலில் இப்பணியின் முனைப்புப் பெரிதும் வேண்டப்படுகின்றது. இடப் பெயர்வு நிலையில் சிறுவரின் உளநிலை பெரிதும் துன்பத்திற்கு ஆளாவதை எல்லோரும் கருத்தூன்றி நோக்குவதில்லை. எனவே சிறுவரின் உள்ளம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஆதரவற்ற சிறுவர் உள்ளம் எப்போதும் அலை பாய்ந்து கொண்டிருக்கும். ஓரிடத்தில் நிலை கொள்ளாது. அதன் வெளிப்பாடு சிறுவர் நடத்தையில் தெரியும். எதையோ எதிர்பார்த்து கண்கள் சோகத்திரை விரித்து நிற்கும். அதில் 'தேடல்' என்னும் குறிப்பு எழுதப்பட்டிருக்கும். எதிர் கொள்ளும் ஒவ்வொரு முகத்திலும் எதையோ தேடி நிற்கும் உணர்வு புலப்படும். அந்த உணர்வின் நிழலைக் கண்டு இணையும் அன்புள்ளம் தோன்றும் வரை அந்தச் சிறாரின் உள்ளம் அமைதியடையாது. விழி மலராது. முகம் மகிழ்வை உணர்த்தாது, வாய் உரை பேசாது, ஊமையாகி ஒளியிழந்து திரியும் அந்தச் சின்ன முகத்தில் 'தேடல்' மட்டுமே தெரியும். எனவே அத்தகைய கொடியிலிருந்து அறுந்து விழுந்த மொட்டுகளைப் பேணி, மலர வைத்து மணம் பரப்பச் செய்ய ஏற்ற இல்லங்கள் அமைய வேண்டும்.

**சிறுவர் இல்லம்.**

சிறார்களுக்கென இல்லம் அமைப்பது எளிமையான பணியன்று. வயது நிலை, கல்வி நிலை, சூழல் நிலை என்பவற்றிற்கு ஏற்ப இல்லம் அமைவது இன்றியமையாதது. இடம் பெயர்ந்து, பெற்றோரைப் பிரிந்து வாழ நேர்ந்த சிறுவர்களுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட தனிமை உணர்வை முதலில் போக்க வேண்டும். அதற்கென ஆவன செய்யும் வகையில் தொழிற்பட வேண்டும். இருளிலே நிற்பது போலப் பயப்படும் சிறுவரை ஏற்றபடி வழிநடத்தப் பயிற்சிகள் தரவேண்டும். சிறுவர் இழந்து நிற்கும், பெற்றோரின் அன்பு, பரிவு, நட்பு, தோழமை என்பவற்றை முடிந்த வரை பெற்றுத்தர நம்பிக்கையூட்ட வேண்டும். பல்வேறு இழப்புகளின் தாக்கத்தால் இறுகிப் போன பிஞ்சு உள்ளங்களை இளகவைக்கப் பல முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிறுவர் உள்ளம் கள்ளமற்றது. பேச்சு நிலையில் சிறுவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார்கள். எனவே பெரியவர்கள் சிறுவர்களோடு பேசும் போது மிகவும் கவனமாகப் பேச வேண்டும். தன் மீது அன்பு செலுத்துபவரைச் சிறுவர் எளிதில் இனம் கண்டு கொள்வர். இதைவிட 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என ஒரு முதுமொழியும் உண்டு. சிறுவர் உளநலம் கெடாத வகையில் முதலில் எம்மீது நம்பிக்கை உண்டாகும் வகையில் நாம் செயற்பட வேண்டும். தனது அன்புக்குரிய பெற்றோரை இழந்து நிற்கும் நிலையில் தன் மீது அக்கறை கொண்டவர்களை மதிக்கும் பண்புடைமை சிறாரை வந்தடைய இது வழிவகுக்கும். உள்ளத்திலே உறைந்து விட்ட சோகத்தை துடைக்கவும் இந்த அன்புடைமை தான் வழிகாட்டும்.

வயது நிலையிலே சிறாரின் வாழ்வுச் சூழல் திடீரென மாறுபடும் போது அவர்கள் சிறார் இல்லங்களிலே அடைக்கலம் தேடி வருவதற்கு முன்னர், வீதிகளிலே அலையும் நிலையில் சீரழிந்து போகும் தன்மையும் உண்டு. எனவே வீதியிலே தனியாக அலை யும் சிறாரை உடனடியாக இல்லங்களிலே சேர்ப்பிக்க வேண்டும். அதன் மூலம் சிறுவர் துர்நடத்தை, சிறுவர் துஷ்ப்பிரயோகம் என்பவற்றைத் தடை செய்ய முடியும். வழி காட்டுதல் நிலையில் பெற்றோரை விட இல்லங்கள் ஒரு ஒழுங்கு நிலையில் செயற்பட முடியும், காலம், இடம் அறிந்து பழகும் பயிற்சியை இல்லத்து வாழ்க்கை எளிதாகக் கற்றுக் கொடுக்கும். குறுகிய மனோபாவம் இன்றி விரிந்த மனநிலையில் எல்லோருடனும் இயல்பாகப் பழக வாய்ப்புப் பெற்ற சிறாராக அவர்கள் உருவாக இல்லம் வழி சமைத்துக் கொடுக்கும். தன்னைப் போலப் பிறரும் துயரங்களைத் தாங்கி நிற்பதைச் சிறார்கள் நேரடியாகக் காணும் போது மனம் கனிந்து மற்றவர்களுக்கு உதவும் பண்புடையவராய் மாறிவிடுவர். இந்த மாற்றம் அவர்களைத் தனிமைத் துயரில் இருந்து மீட்டு விடும். பிறர் நலம் பேணும் பண்புடையவராய் மாற்றும். 'அன்பு ஈனும் ஆர்வம் உடைமை, அது ஈனும் நண்பெனும் நாடாச் சிறப்பு' என வள்ளுவர் கூறிய உள்ளத்தின் செயற்பாட்டு நிலையை இந்தச் சிறுவர்களும் அடைய சிறுவர் இல்ல வாழ்வியல் உதவும். இழப்புகளால் வெறுப்படைந்து வன்முறையால் தன்னை நிலைப்படுத்த நினைக்கும் சிறுவர்களைக் கைப்பற்றி அழைத்துச் சென்று வாழ்க்கைப் பாதையிலே சீராக நடந்து செல்லப் பயிற்சி அளிப்பது இன்றைய மனிதர்களின் கடமையாகும்.

**பண்பாட்டு நிலையில் மரபு பேணல்.**

கல்வி நிலையிலே காலத்திற்கு ஏற்ற கல்விப் பயிற்சி பெறாத சிறுவர் இன்று பலர் உளர். குடும்ப வறுமையும், நோயும், குடிப் பழக்கமும் சிறுவர் கல்விப் பயிற்சியைத் தடை செய்கின்றன. ஏட்டுக் கல்வி மட்டுமன்றி பண்பாட்டுக் கல்வியையும் சிறார் இழந்து நிற்கின்றனர். பண்பாட்டுக் கூறுகளை இனம் கண்டு அவற்றைப் பயில சிறுவர் இல்லங்கள் வாய்ப்பளிக்கும். கூடி வாழ்வதால் ஏற்படும் நன்மைகளையும் மன நிறைவையும் சிறு வயதிலேயே அறிந்து கொள்ள முடியும். தன் உள்ளத்திலே சுமக்கும் துன்பத்தை தன் வயது ஒத்தவருடன் பகிர்ந்து கொண்டு வாழப் பயிற்சியும் கிடைக்கும். தாயற்ற இரு சிறுவர்கள் ஓரிடத்திலே வாழும் போது ஒருவரையொருவர் எளிதில் உணர்ந்து கொள்வர். தமது நினைவுத் திரையில் நிழலாய் இருக்கும் தாயின் உருவத்தைப் பற்றி உரையாடி மகிழ ஒரு துணை கிடைக்கும் போது உள்ளத்திலே பரவசம் ஏற்படுகின்றது. என்றோ ஒரு நாளைக்கு மீண்டும் போய் வாழுவோம் என்ற இலக்குடன் கண்ணில் நிறைத்து வைத்திருக்கும் தான் வாழ்ந்த வீட்டை அடிக்கடி நினைவு படுத்திப் பார்க்கும் பயிற்சியை தனது புதிய நண்பனுக்கும் பயிற்றும் ஆற்றல் தான் பண்பாட்டுக் கல்வி தந்த பயனாகிறது. சிறுவர் இல்லங்களின் அமைப்பு சூழலுடன் ஒத்தியைவதாக அமைய வேண்டும். சிறுவர் ஏற்கனவே பழகிய வீட்டு வாழ்க்கையிலிருந்து இல்லத்து வாழ்க்கைக்குத் தம்மை உடனடியாக இயைபுபடுத்திக் கொள்ள ஏற்றவகையில் இல்லங்கள் அமைய வேண்டும். பண்பாட்டு நிலையில் சில மரபுகளும் பேணப்பட வேண்டியனவே. சிறுவர்களிலும் ஆண், பெண் என்ற வேறு பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. எதிர்காலத்துச் சமூகத்தை கட்டிக்காக்கும் மனிதர்கள் என்ற நிலையில் சிறுவரது வளர்ச்சி நிலையில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மரபு நிலையால் சில நடைமுறைகள் பயிற்றப்பட வேண்டும். கீழைத்தேச மரபின் இறுக்கமான நடைமுறை இன்று சற்றுத் தளர்வுற்றிருப்பினும் பெருமளவு மாற்றம் ஏற்படவில்லை. பரந்த இடப்பரப்பிலே இல்லம் அமைவுறுவது நன்று. அது சிறுவர் உள்ளத்திலே உள்ள குறுகிய எண்ணங்களை விரட்டி விடும். சூழலைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க, இடையறாத பயிற்சி அளிப்பதே சிறந்தது. தான் வாழும் சூழல் பலர் ஒத்துழைப்பால் பொலிவுடன் திகழ்கிறது என்ற சமூக நோக்கை இச்

முனைவர்
மனோன்மணி சண்முகதாஸ்

செயற்பாடு சிறுவர் நினைவில் பதிக்கும். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற குறிக்கோளைச் சிறுவர் நாளாந்தம் உணரவும் இது வழிவகுக்கும். சூழல் பாதுகாப்பு என்னும் செயற்பாட்டால் மனித வாழ்வியலில் ஏற்படும் நன்மையை ச் சிறுவர் செயற்பாட்டு நிலையில் கற்க வாய்ப்புண்டாகும்.

மரங்களை நாட்டி வளர்ப்பதும் பேணுவதும் சிறார் உடலுக்கும் உள்ளத்திற்கும் நலம் தரும் அருமருந்துகளாகும். தன்னுடைய கவனிப்பினாலும் உடல் உழைப்பினாலும் மரஞ்செடி கொடிகள் வளர்ந்து, பசுமையும் வளமும் நல்கும் போது சிறாருக்கு மனமகிழ்ச்சி கிடைக்கிறது. அவற்றின் விளைபொருள் உணவாகப் பயன்படும் போது புதிய உற்சாகம் பிறக்கிறது. பகிர்ந்து உண்ணும் மன நிறைவு சிறாருக்கு உடல் நலம் தருவதாகும். கல்வி நிலையிலும் பயிர்ச் செய்கை பயனுள்ள முயற்சியாக எதிர் காலத்திற்கும் சிறந்த தொழில் வழிகாட்டியாகிறது. சிறுவர் மனம் பண்பட பயிர்ச்செய்கை பேருதவி செய்யும். இயற்கையின் துணையுடன் முளைத்து வளரும் செடியும் கொடியும் மரமும் வளர்ந்து காலத்துக்கேற்ப பயன்களைத் தருவதை நேரடி அனுபவம் மூலம் காணும் சிறுவர் உள்ளம் தமக்கும் இயற்கை துணை செய்யும் என்ற நம்பிக்கையை உள்வாங்கிக் கொள்ளும். பருவ மாற்றங்களையும் இயற்கையின் ஆற்றலையும் கணித்து தொழிற்படும் பட்டறிவைச் சிறுவர் பெறவும் இது வாய்ப்பளிக்கும். சிறுவர்களின் எதிர்காலத்தை அவர்களே திட்டமிடவும் இப்பட்டறிவு நிலை உதவும்.

( 06ம் பக்கம் பார்க்க)

## சந்ததிக்காய் சிந்தியுங்கள்!

துன்புறுத்தல்களாலும், துஷ்பிரயோகங்களாலும் துண்டாடப்படுகின்ற எமது வாழ்க்கை

தொண்டே மகேசன் தொண்டு எனப் புறப்பட்டால், அதில் நேர்மையையும், அறப் பணியும் இருந்தால், அதற்கு உதவி செய்யப் பலர் முன்வருவர் என்பதையே ஆறு. திருமுருகன் மேற்கொண்ட விதவை அன்னையர்களுக்கான வீடமைப்பு எடுத்துக் காட்டுகிறது.

துன்பம், துன்பம் எனக் கூறிக் கொள்வதும், "ஓ இறைவா" எனப் பரிதாபம் பேசுவதும் இடுக்கண் களைய மாட்டாது. மாறாக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். சொல்வது செயலுருப் பெறும் போது அது பிறர் துன்பத்தைப் போக்குகிறது. அதனை ஆறு திருமுருகன் அவர்கள் மேற்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது.

இத்தகைய வீட்டுத் திட்டங்கள் மென்மேலும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் குடியிருக்க இடமின்றி குமுறும் நெஞ்சங்களுக்கு ஆறுதலை - வாழ்வில் ஓர் விருப்பை ஏற்படுத்த முடியும் என்பது உறுதி.

துன்புறுத்தல்களாலும், துஷ்பிரயோகங்களாலும் துண்டாடப்படுகின்ற எமது வாழ்க்கை இனியும்.................. இருண்டு விட அனுமதிக்கலாகாது. இது எமக்குரிய காலம்!

**பெரியோரே........**

சிறுவர் துஷ்பிரயோகங்களின் மூலம் நீங்கள் சம்பாதித்துக் கொள்வது "ஆரோக்கியமற்ற உங்கள் சந்ததியைத்தான்" எனத் தெரிந்து கொள்ளுங்கள். எங்களை இம்சிப்பதாலும் எம் உரிமைகளைப் பறித்தெடுப்பதாலும் உங்களுக்குக் கிடைக்கப் போவது வலுவற்ற பரம்பரையும் உங்களை எதிர்க்கும் நாங்களும் தான்!!



ஆகவே..................... சிறுவர்களை ..................... அரவணையுங்கள்! அன்பு செய்யுங்கள்!! உற்சாகமூட்டுங்கள்!!! உரிமை கொடுங்கள்!!!!

"சிறுவர்களின் வளர்ச்சி - அது
உலகத்தின் உயர்ச்சி"

- **ரீ.ரீ மயூரன்**
*(மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு)*

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய தகவல்களை தெரியப்படுத்த வேண்டிய முகவரி:

மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
போதானா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
☎ 021-2261 **Ext** 274

சிறுவர் பாதுகாப்பு (ஐ. இ.) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு.

**பொருட்கள்...**

பருத்தித்துறை இறங்கு துறையில் வாதுவ, பொல்கொட, மற்றும் ஹெந்தல ஆகிய மூன்று கப்பல்கள் தரித்து நிற்கின்றன.

இவற்றிலிருந்து மிக விரைவாகப் பொருட்களை இறக்குவதற்கே துறைமுகப் பணிகளை இரவு பகலாக மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (இ-23-43)

---

**வீட்டைத்...**

வீட்டைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, வீட்டுக்கருகில் உள்ள காவலரணில் கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், திடீரென வீட்டுக்குள் புகுந்து அவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சி எடுத்ததாகவும், இதனால் அச்சமடைந்த பிரஸ்தாப பெண் அபயக்குரல் எழுப்ப அயலவர்கள் கூடியதனால் சிப்பாய் தப்பியோடி விட்டதாகவும் தெரியவருகிறது.

சம்பவம் குறித்து சாவகச்சேரி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

**உள்ளூராட்சி...**

இது குறித்து புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு அரசு உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தற்போது பிலிப்பைன்ஸ் சென்றுள்ளதால், அவர் நாடு திரும்பிய பின்னர் தேர்தலை ஒத்திவைக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 68 உள்ளூராட்சி மன்றங்களுக் குமான வேட்பு மனுக்களை ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய மூன்று அரசியல் கட்சிகளும் 31 சுயேட்சைக் குழுக்களும் நேற்று முன்தினம் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

---

**அமைச்சர்...**

அதேவேளை இப்பாதைகளில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் உள்ள மிதிவெடிகளை இராணுவத் தினரும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மிதிவெடிகளை புலிகளும் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மிதிவெடி அகற்றும் பணிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கண்காணித்து வருகிறது.

வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் மெலிந்த மொறகொட வவுனியாவில் 21வது படையணியில் பாதை திறப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்தினார். இக்கூட்டத்தில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் அரச அதிபர்களும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சுமார் 8 ஆண்டுகளுக்கு பின் எதிர்வரும் 15ந் திகதி திறக்கப்பட இருக்கும் இப்பாதை கிளிநொச்சியுடன் மட்டுப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏ 9 கண்டி - யாழ். வீதியும், உயிலங்குளம் வீதியும் திறக்கப்பட்ட பின்னர் தற்போது பாவனையில் உள்ள பிரமணாலங்குளம் பாதை முற்றாக மூடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# சிவயோகம் குடியிருப்பு வீடுகள் இன்று கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலண்டன் சிவயோக இந்து அறக்கட்டளை நிறுவனத்தின் உதவியுடன் அமைக்.கப்பட்ட அன்னையர் குடியிருப்பு இல்லங்கள் திறப்பு விழாவும் கையளிப்பு வைபவமும் இன்று காலை 9மணிக்கு செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் கந்தரோடை சிவயோகம் அன்னையர் குடியிருப்பு பகுதியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி (செல்வி) நவமலர் கனகரட்ணம், யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீடாதிபதி வைத்திய கலாநிதி பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும்,

யாழ் போதனா வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி பவானி சந்திரகுமார், வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. கோகிலா மகேந்திரன், தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் திருமதி. இரதி தியாகராஜா, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி.கலைவாணி இராமநாதன் மற்றும் யாழ் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை போதனாசிரியர் திருமதி கருணாதேவி சிவாஜி ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர் (இ)

## கப்பல் பயண நேர்முக விசாரணை நீக்கப்பட்டது

திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகளுக்கு திருமலையில் நடைபெறும் நேர்முக விசாரணை இனிமேல் நடைபெற மாட்டாதென திருமலை பட்டணமும் சூழலுக்குமான பிரதேசசெயலர் எஸ். அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இப்புதிய நடைமுறையின் படி நேர்முக விசாரணையின்றி பயணிகள் கப்பல் பயணத்தை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (வ)



இலங்கை மின்சார சபையின் யாழ் நகர் பராமரிப்புப் பணிமனையில் அண்மையில் இடம்பெற்ற ஒளிவிழாவின் போது எடுக்கப்பட்ட படம். படத்தில் வண. பிதா சாள்ஸ் கொலின் அடிகள் மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் திரு. ஆர். முத்துரட்ணானந்தன் வண. பிதா கலாநிதி அ.பி. ஜெயசேகரம் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.


30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாக தயாரிக்கப்பட்டது.
சுத்தமான
வி. எஸ். பி. நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும், ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (C-1986)



அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா இரண்டாவது அணி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்.

இடம்: புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம்.
காலம்: நாளை (11.02.2002) திங்கட்கிழமை,
காலை 10.00 மணி.
அனைவரும் தவறாது சமூகம் தரவும்.

2வது அணி மாணவர்கள் சார்பாக
த. மகேஷ்வரலிங்கம்.
[C/3511]



உ
சிவமயம்

திருமணத் திருமுகம்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விஷு வருடம் தை 28ம் திகதி இன்று (10.02.2002) ஞாயிற்றுகிழமையும், கிருஷ்ண பக்ஷம் உத்தராடம் நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தன்று காலை 10.47 மணி முதல் 11.30 மணி வரையுள்ள மேட லக்கின சுப முகூர்த்தத்தில்

திரு. திருமதி இரத்தினம் தம்பதிகளின் புத்திரன்
திருநிறைச் செல்வன்
ஜெயபாஸ்கரன்
அவர்களுக்கும்



திரு. திருமதி கணேசன் தம்பதிகளின் புத்திரி
திருநிறைச் செல்வி
தனுஷா
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நீர்கொழும்பு ‘றெயின்போ‘ வரவேற்பு மண்டபத்தில் (இல. 3 கறன் பிளேஸ்) திருமாங்கல்ய தாரணம் மங்களகரமாக நடைபெறுகிறது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

றியோ - ஜெயபாஸ்கரன்
றியோ ஐஸ் கிறீம், யாழ்ப்பாணம்,
111/1, கடற்கரைத் தெரு,
நீர்கொழும்பு.

திரு. திருமதி கணேசன் குடும்பத்தினர்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
திரு. திருமதி யோகராஜா குடும்பத்தினர்
(பிறீன்ஸ், வவுனியா)
47, விவேகானந்தா மேடு, கொழும்பு 12.

(இரு வீட்டார் அறிவிப்பு)
[C/3510]



உ
சிவமயம்

திருமணப் பெரு விழாவிற்கு
இனிய நல்வாழ்த்துக்கள்

## வாழ்த்துகின்றோம்



இந்து கலாசார அமைச்சினால் 18.11.2001ல் நடாத்தப்பட்ட கலைஞர் கௌரவிப்பு வைபவத்தில் அரியாலையைச் சேர்ந்த இசை அமைப்பாளரும் ஓகன் ஆசிரியருமாகிய

**ஆர்மோனிய இசையரசு**

**திரு. எஸ். பொன்னுத்துரை**

அவர்களுக்கு

'கலைஞான கேசரி' எனும் விருது கிடைத்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*– நல்லூர், அரியாலை வாழ் மக்கள் –*

[C/4468]

## ஜெயபாஸ்கரன் * துஷாை



மங்கலம் பொங்கும் இல்லறம் என்றும் நல்லறம் காணும் இனிய நன்னாளில் எங்கள் அன்பு மாமாவுக்கும் மாமிக்கும் இதயம் கலந்த நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சி பொங்க கூறிக்கொள்கின்றோம்.

வாழ்க பல்லாண்டு இனிய முத்தங்கள்!!

இன்றைய நன்னாளில் திருமணவிழா நிகழும் நீர்கொழும்பு 'றெயின்போ' வரவேற்பு மண்டபத்திற்கு நேரில் வந்து ஆசிகூறி அரவணைத்து இன்பமுத்தங்களை அன்போடு பரிமாற முடியாது போனாலும், இங்கிருந்து எங்கள் வாழ்த்துக்களை அன்போடு தெரிவிக்கின்றோம். பல்லாண்டு சீரும் சிறப்போடும் வாழ தோழமை நிறைந்த வாழ்த்துக்கள்!

**த. ஆத்மன்,** *ஆண்டு ஒன்று பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.*
**த. பிரமன்,** *சோமசுந்தரம் பாலர் பாடசாலை, யாழ்ப்பாணம்.*
**த. பரணிகாந்,** *ஆண்டு 5, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.*
**த. சாரணிகாந்,** *சோமசுந்தரம் பாலர் பாடசாலை, யாழ்ப்பாணம்.*

[C/3512]

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.